# கமலம்



மலர்: 6

மலர்வு: தி.பி.சுறவம் 2029
கி.பி.தை 1999

*தமிழால் தமிழுக்குள்*

*தமிழனைத் தேடுவோம்*

## தமிழ்த்தாய் வணக்கம்

உலகம் யாவிலும் உரைமொழி ஆக்கியும்
திலகமாய்க் குமரிநன் நாட்டை நின்றும் பூ
....உலகம்.....

எங்கும் மானிடம் ஏற்புறப் பண்பெனும்
அங்கம் ஆகினாய் அன்னையுன் தாள் தலைக்கே
.......உலகம் ......

பலமொழி உலகிடைப் பயின்று வளமுறப்
பலமுதற் பொருள்படு சொற்கள் நல்கியே
நலமுறப் பிறமொழி நின்றாய் இயற்கையின்
பலமுறப் பார்முதற் பிறந்த என்தமிழே -- உலகம் ...
குமரியில் முதலெனப், பிறந்தவன் வாயிடைப்
புகுந்தனை முப்பிரி விலக்கணம் கொண்டே
உலகிடைப் பலவினம் தோன்றிய பின்னும்
அலகிலாப் புகழுறப் பரந்தனை தமிழே! ---உலகம் ..
மூண்டெழு புதுமையிற் பலமொழி பிறந்தும்
தோற்றம் அழிவெனப் பலமொழி சிதைய
மூத்தும் காத்தும் முருகினிற் சிறந்தும்
போற்றும் என்தமிழே புவிதனில் நிலைத்தாய் --உலகம்..
வள்ளுவன் கம்பன் வான்புகழ் இளங்கோ
தெள்ளிடு புலமைத் திருமகள் அவ்வை
சங்கச் சான்றோர் சாற்றிடப் பெருகிய
மங்காப் புகழே! என்தமிழே பணிந்தேன் --உலகம்

பாடல் ...... அழலாடி

இதழெண்                    கனல்


2 சந்திரிக்காவும் சரித்திரமும் - ஆசிரியம்.
7 கலாச்சாரக் கண்ணோட்டமும் சூழற் போராட்டமும்
11 கம்பரசம்
16 பெயர்
17 தாலாட்டு
20 தெளிவு
23 இராவணன்
27 கருத்தரங்கு
30 எழுத்தாளர் மகாநாடு
31 கன்னித்தமிழ்
32 தமிழ் எங்கள் உயிருக்கு நேர்


*வண்டினங்கள் மதுவாடிக் களியாட, மங்கையர்கள் குழல்சூடி மகிழாட மலரும் மலரல்ல, தமிழின் பகைகண்டால், தமிழறியாத் தமிழனைக் கண்டால் கனன்று எரிக்கக் கனலில் மலரும் மலர் கமலம்.*

# சந்திரிகாவும் சரித்திரமும்

முடிமன்னர் காலம் போல் பரம்பரையாக, ஒரே குடும்பம் நாட்டின் ஆட்சியுரிமையைப் பெறுகின்ற ஒரு ஒழுங்குமுறை தென்கிழக்காசிய நாடுகளிலே, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. உலகில் விகிதாசார அடிப்படையில் அதிகம் கற்றறிவு பெற்ற மக்கள் மிக்கவை, தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த இலங்கை, இந்தியா, பாகித்தான் போன்ற நாடுகளாகும். அப்படியிருந்தும் அந்த மக்கள், கற்றவன் கல்லாதவன் என்ற வேறுபாடின்றி, ஓட்டுற பக்கமே ஓடுற செம்மறியாடுகளாய், மதம் காரணமாக, சாதி காரணமாக, மொழி காரணமாகப் பக்கம் சேர்வது மட்டுமல்லாமல், வயிற்றுப் பட்டினிக்காகத் தம்குலப் பெண்களின் மானத்தையே மாற்றானிற்கு விற்று மகிழ்கின்ற ஏழைகளாய் வாழ்கின்றார்கள்.

இந்த நாடுகளின் வரிசையில் இலங்கைத்தீவும் இந்தியாவும் முன்வரிசையில் நிற்கின்றன. இரண்டாம் உலகப் போரை அண்டிய போராட்டகாலத்தில் இந்தியச் சுதந்திரத்திற்காக இந்தியாவின் பதின்நான்கு மாநிலங்களில் உள்ளவர்களும் நேதாசி சுபாசு சந்திரபோசு அவர்களின் தலைமையில் புரட்சிப்படையாகவும், காங்கிரசு தலைமையில் காந்தியின் வழிநடத்தலில் அறவழியாலும் போராடினார்கள். இந்தியாவிலும், மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் யப்பானியப் படை ஒருபுறம், நேதாசியின் இந்தியச் சுதந்திர இராணுவம் மறுபுறம், காந்தியின் சட்டமறுப்பு இன்னொருபுறம் இம்மும்முனைத் தாக்குதலைத் தாங்கமாட்டாத பிருத்தானிய அரசு, பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்கிற பாணியில் இந்தியாவுக்கும், ஒரு போராட்டமும் நடத்தாத இலங்கைக்கும் சுதந்திரம் வழங்கியது. இந்தச் சுதந்திரப் போராட்டத்தில் இருமுனைகளிலும் பெரும் பங்கு எடுத்துக் கொண்டவர்கள் தென்னக மக்கள் குறிப்பாகத் தமிழர்கள். விடுதலையுணர்விற் பிறந்த (நாட்டுணர்வு) தேசியம் என்கின்ற ஒன்றுணர்வை பயன்படுத்திக் காந்தி என்கின்ற வடவர், ஆரியத்தின் கையில் ஆட்சியை ஒப்படைத்து மாகாத்மாவானார். இந்தியத் தேசியம் என்கின்ற மாயையில், சிறுபான்மை இந்திக்குட் பெரும்பான்மையை அடக்கிவிட்டார். அந்த மாயையிற் கட்டுண்ட இந்திய மண்ணுக்குச் சொந்தக்காரனும், இன்றைய புதிய விடுதலையிற் பெரும்பங்கு கொண்டவுனுமான தமிழன் சிந்திக்கத் தவறிவிட்டான். விளைவு, சவகர்லால் நேரு என்கிற சிறுபான்மை வடவரின் கையில் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது.

தேசவிடுதலையால் மக்களிடையே தன்னை உயர்த்திக் கொண்டிருந்த காங்கிரசு மாயையில், சவகர்லாலைத் தொடர்ந்து அவருடைய மகள் இந்திராவையும், அவரைத் தொடர்ந்து வரவிருந்த அவரது இரண்டாவது மகன் சஞ்சேயின் மரணம் காரணமாக, மூத்த மகன் ராசீவையும் பின்பொடர்ந்தனர். இந்திராவிற்குப் பிறகு காங்கிரசின் பெயரால், அரசியற் கொள்ளையர்களின் கையில் ஆட்சி மாறியது. இதைப் புரிந்துகொண்ட மக்கள் காலத்திற்குக் காலம், இந்தப் போலித் தியாகிகள் நிறுவனத்திற்குப் பதிலாக, வேற்றினங்களின் கையில் ஆட்சியைப் பலதடவைகள் கொடுத்தார்கள். இருந்தும், ஆரியத்தின் சூழ்ச்சித்திறனும், மேற்குலக ஆரியமாகிய காக்கேசிய இனத்தின் பிற்தூண்டலும், அந்த ஆட்சிகளை நிலைநிற்க விடவில்லை. நாடு தளம்பியது. இந்தத் தளம்பலைக் காரணம் காட்டிக்கொண்டு, பழைய தொண்டர் நிறுவனமான காங்கிரசு

ஆட்சியைப் பிடிக்கும் நோக்குடன், மரணமடைந்த ராசீவின் மனைவி விதவை சோனியாவிடம், தலைமையை வழங்கியுள்ளது. சோனியா ஒரு இத்தாலியக் காக்கேசிய இனத்தவர். அவருக்கும் இந்தியாவிற்கும் திருமண உறவு தவிர வேறொன்றும் கிடையாது. இந்திய ஆரியம் இருந்த இடத்தில் மற்றவர்கள் அமர்வதை விரும்பாத காக்கேசிய ஆரியம், செய்த சதியின் விளைவே இது. இன்று ஒரு இத்தாலியப் பெண்ணிடம் இந்திய மக்களின் ஆட்சி கையளிக்கப் படப் போகின்றது. அந்தளவிற்குத் தொண்ணூறு கோடி இந்திய மக்கள் மரமண்டைகளாகச் சிந்தனையற்றுக் கிடக்கின்றார்கள். அணுகுண்டுகள் வெடித்தாற் போதாது, மறவுணர்வுகள் வெடிக்கவேண்டும். இன்று சோனியாவின் நுழைவு, ராசீவின் கொலைக்கு மேற்குலகம் காரணமோ என்ற ஐயத்தை மெய்யாக்குகிறது. பொருளாதாரக் கட்டுப்பாடு அல்ல எந்தக் கட்டுப்பாடுகளிற்கும் இந்தியா அடங்காது, என்று அமெரிக்கச் சண்டியனைப் பார்த்து வாச்சுபாய் சொன்னபிறகும், சும்மா கிடக்குமா அமெரிக்கா!. அதுதான் மேற்குலகம் சொல்வதற்குத் தலையாட்டும் ஒரு ஆட்சி இந்தியாவில் வேண்டும். இன்றேல் கீழைத்தேயம் எழுந்துவிடும் என்ற சதியே சோனியாவின் நுழைவு. இதை இந்தியர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இது ஒருபுறமிருக்க யாருமே போராடாமலே இலங்கைக்குப் பிரித்தானியன் சுதந்திரம் வழங்கினான். அப்படி வழங்கும் போது, தன்பிடி நழுவி விடாமல் இருக்க, எதிர்காலத்தில் தன் சந்தையையும் அரசியலையும் நிலைப்படுத்த, எதிர்கால இனமோதலை எதிர்பார்த்துச் சிங்களவர் கையில் நாட்டை ஒப்படைத்துப் போனான். டி.எசு. சேனநாயக்கா என்பவர் முதலாவது பிரதமரானார். அவர் வந்த உடனேயே செய்த முதல் வேலை, கல்லோயா நதிப் படுகையில் இருந்த பெருவளம் மலிந்த பட்டிப்பளை என்ற பேரூரை கல்லோயா என்று பெயர் மாற்றிச் சிங்களக் குடியேற்றமாக்கியது தான். அந்த நேரத்தில் தமிழ்ப் பெருந்தலைவர்கள் தேசியவாதத்தில் அடங்கிக்கிடந்தார்கள். 1956 வரை வெளியில் தெரியாதமாதிரி தமிழின அழிப்பு வேலைகளை மகன் டட்லி சேனநாயக்கா தொடர்ந்து செய்தார். இவரது அமைச்சரவையில் உணவு விவசாய அமைச்சராக இருந்த எசு. டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா என்கிற இனவெறியர் ஆட்சிக்கு வந்தார். அவர் பின் அவருக்குப் தர்மபத்தினி சிறிமாவோ வந்தார். பின் அவரது மகள் சந்திரிகா ஆட்சிக்கு வந்துள்ளார். இவர்தான் இலங்கை வரலாற்றில் இனமோதல்களைப் பெரிதாக்கித் தமிழ்–சிங்கள மக்களைப் பேரழிவிற்கு உள்ளாக்கியவராவார். ஒரு அரசு, எம் நாடு என்று சொல்கின்ற ஒரு நிலப்பரப்பில் வாழ்கின்ற மக்கள் மீது எறிகணைகள், விமானங்கள் மூலமாகக் குண்டு வீசி, மக்களை அழிக்கின்ற செயல் சிறிலங்கா என்று இன்று சொல்லப்படும் ஈழத்தீவிற் தான் நடைபெறுகின்றது.

உரிமை மீட்பிற்காக போராடுகின்ற விடுதலைப் போராளிகளின் மரணம் ஒரு இழப்பல்ல, விடுதலையுணர்விற்கு வலுவூட்டும் அர்ப்பணிப்பு அது. ஆனால் ஆசை வார்த்தைகளை நம்பி, வயிற்றுப் பாட்டிற்காக இராணுவத்தில் சேர்ந்து, ஆயிரமாயிரமாக மடிந்து கொண்டிருக்கும் சிங்கள இளைஞர்களின் பரிதாபகரமான மரணம்

இரங்கத்தக்கது. ஆட்பலநோக்கில் ஏழை இளைஞர்களைத் திரட்டி, போதிய படைப் பயிற்சி இன்றி, யுத்தமுனைகளில் முன்னரண்களில் நிறுத்திவிட்டு அதிகாரிகள் உள்ளரண்களில் பாதுகாப்பாக இருக்கிறார்கள். விடுதலைப் போராளிகளின் புதிய அலைகள் உள்வீட்டிற்குள்ளும் நுழைந்து அதிகாரிகளையும் அள்ளிச் செல்கிறது. என்னதான் செய்தித் தணிக்கை செய்தும், புதியதொழில்நுட்பப் பொதுத்தொடர்புச் சாதனங்களின் ஊடாகத் தணிக்கையையும் மீறிச் செய்திகள் சிங்கள மக்களையும் சென்றடைகின்றன. ஓரிரு நாட்போரிலேயே ஈராயிரம் படைவீரர்கள் பலியாவதும், செயலிழப்பதும், சிங்களமக்களால் தாங்கிக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. இந்த மனக்குமுறலை அடக்குவதற்கு, இனக்குமுறலை உருவாக்குவதே அம்மையாருக்குத் தெரிந்த ஒரே வழி. அந்த அடிப்படையில் அம்மையார் சரித்திரம் பேசியுள்ளார். அதுவும் தென்னாபிரிக்காவில். உலகுக்கு உண்மை சொல்லப்படவேண்டுமாம். தமிழர்கள் வந்தேறு குடிகள். அவர்களுக்கு ஈழத்துமண்ணில் உரிமையில்லையாம்.

சிங்கள அறிவுசீவிகள்—பொதுமக்கள் மட்டத்தில் சந்திரிகா அம்மையார் பேசுவது பொய், செய்வது எல்லாம் அறக்கொலை என்று சொல்லமுடியவில்லை. சொல்வதானாலும் சந்திரிகா கூறும் வரலாற்றை அறிந்திருப்பார்கள் என்று கூறமுடியாது. சிங்களம் என்ற ஓர் இனம் வரலாற்றுக்காலத்தில் இல்லவே இல்லை என்பது, அவர்களுக்குத் தெரியாதா? கலிங்கத்தை ஆண்ட சிங்கபாகு— சிங்கவல்லியின் பரம்பரை சிங்களவர் என்று அழைக்கப்படவில்லை. அந்தச் சிங்கக்குடும்பத்தில் பிறந்து, கட்டுக்கடங்காத கழிசடையாய், தறுதலையாய் இருந்த விசயன் என்பவனைத் தகப்பன் சிங்கபாகுவே அவனுடைய தோழர்களுடன் மரக்கலத்தில் ஏற்றி நாடுகடத்தினான். நல்லூழ் இருந்த காரணத்தினால் புயலினால் தள்ளுண்டு, விசயன் ஈழத்தீவின் தம்பண்ணை என்னுமிடத்தில், மேற்கு வன்னி மண்ணில் கரையேறினான்.

இக்காலவேளையில் மாவீரன் இராவணனின் வழிவந்த ஒரு கன்னித் தமிழ்ப்பெண் குவேனி, வன்னியில் இருந்து ஈழத்தை ஆண்டுவந்தாள். இவளுடைய ஆட்சிக்காலம் வரை ஈழத்து மண்ணில் தமிழகத்து மன்னர்கள், குறிப்பாக அந்நாளில் மேலோங்கியிருந்த பாண்டிய மன்னர்கள் படை நடத்தியதாக, வரலாற்று—இலக்கியக் குறிப்புகள் எதுவும் இல்லை. எனவே அந்நாளில் ஈழத்தை ஆண்ட தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் நல்லுறவு கொண்டிருந்தார்கள் எனத் தெரிகின்றது. அந்நேரத்தில் கரையேறிய விசயனும் 700 தோழர்களும் குவேனியினால் கைது செய்யப்பட்டார்கள். மாயமந்திரங்களினால் குவேனி மயக்கிப் பிடித்ததாக மகாவம்சம் கூறுவது பொய். ஆரியக் கலப்புகளுக்கே சொந்தமான புளுகுப்புராணம். அவ்விதம் கைது செய்யப்பட்ட விசயன் விசாரணையின்போது இளவரசன் என்று தெரியவந்தது. ஆனால் தகப்பனாலேயே நாடுகடத்தப்பட்ட தறுதலை என்பது தெரியாமற்போயிற்று. கன்னிப்பெண்ணான குவேனியின் மனதில், ஆரியக் கலப்புக் காரணமாக, வெள்ளை நிறம் கொண்ட விசயனின் மீது காதல் உண்டாயிற்று. வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட விசயன் குவேனியை மணந்ததன் மூலம் ஆட்சி உரிமைக்கு உரியவனான். பழந்தமிழகத்துத் தாயுரிமைச் சமுதாயம் புறவாழ்வு முழுவதையும் ஆணிடம் ஒப்படைத்திருந்த நிலை, அரசுரிமையை விசயன் இலகுவாகப் பெறுவதற்கு உதவியது. குவேனியை மணந்ததன் காரணமாகப் பாண்டியனுடைய அன்பிற்கும் பாத்திரமானான் விசயன். அந்தப்பற்றின்

காரணமாக விசயனின் தோழர்களுக்கு 700 பெண்களைத் தமிழகத்திலிருந்து அனுப்பினான் பாண்டியன். இந்தச் சம்பவங்கள் நடைபெறும் நாட்களில் இலங்கையில் நான்கு ஈச்சுரங்களும் இருந்தன. சிவவழிபாடு மேலோங்கியிருந்தது. நிலைமை தனக்குச் சாதகமாக அமைந்திருந்ததைக் கண்ட விசயன், குவேனியின் கணவன் என்ற நிலையில் மக்களிடையே தன்னை வளர்த்துக்கொண்டு, படைப்பலத்தையும் பெருக்கிக்கொண்டான். குவேனியின் பெயரால் விசயனுடன் அன்பு பூண்டிருந்த பாண்டியன் அவதானக் குறைவாக இருந்துவிட்டான். பலங்கொண்டு விட்ட விசயன் ஆரியத் துரோகத் தனத்தில் இறங்கிக், குவேனியையும் அவளைச் சேர்ந்தவர்களையும் மாவலிப் பிரதேசங்களில் இருந்தும், நீர்வளம் மிக்க நிலங்களில் இருந்தும் விரட்டிவிட்டான். குவேனி வடக்கு வன்னிப்பகுதியில் அந்நாளில் சம்புகோளம் என்றழைக்கப்பட்ட குடாநாட்டிற்குள் நிலை கொண்டதாகச் சில குறிப்புகள் காணப்படுகின்றன. வன்னி வன்னியர் என்ற பெயர்ச்சொல் எவ்வாறு தோன்றிற்று என்று புலப்படா நிலையில், குவேனி என்ற பெயர் மருவி, வேனி----வனி---இறுதியல் வன்னி என்றாயிற்று. அவளது பரம்பரையில் வந்தவர்கள் வன்னியர்கள். அவர்கள் வாழ்ந்த பிரதேசம் வன்னி என்று நாங்கள் துணியமுடியும். அந்த வன்னிப் பரம்பரையின் கடைசி மன்னன் வைரமுத்து பண்டாரவன்னியனின் ஒரு தங்கை, முழங்காவலில் ஆனைப்படைத் தளபதியாகவும் இன்னொரு தங்கை கிழக்குவன்னி அரசப் பிரதிநிதியாகவும் பொறுப்பில் இருந்தனர் என்பது குவேனியிலிருந்து பெண்முதன்மை, பெண்ணுரிமைக் குமுகாய அமைப்பு வன்னியில் கடைசிவரை இருந்தமை மேற்காணும் முடிவிற்கு ஒரு சான்றாகும். இந்த உண்மைகள் தெரியாமல், மகாவம்சப் பிக்குகளின் திரிபுகளுக்குள் மேலும் கூட்டிக் குறைத்துக், காற்றில் கரையேறிய தறுதலை விசயனின் தாய்மண்ணாம் ஈழம். இதிகாச காலத்திற்கு முன்னரே ஈழம் தமிழனின் நாடு. குமரியின் காலத்தில் இருந்து, மனிதன் தோன்றிய நாட்களில் இருந்து, இந்த மண் தமிழனுடையது. என்பதைப் புரியாமற், கி.மு. க்களுக்குச் சில காலங்களிற்கு முன்னால் காற்றில் கரையொதுங்கியதின் சந்ததியின் தாய் மண்ணாம் ஈழம். தமிழர்களுக்கு உரிமையில்லாத மண்ணாம். விந்தையும் விடுகதைகளும் நிறைந்த சரித்திரம் பேசுகிறார் சந்திரிகா.

விசயனும் தோழர்களும் பேசியது பாளிமொழி அவர்களின் மனைவிகள் பேசியதும் சூழல் மொழியும் தமிழ். அத்தோடு விசயன் பலங்கொணடுவிட்ட பின் கலிங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தினான். இதனால் தமிழும் பாளியும் கலந்த ஒரு பாசை உருவாகிற்று. பாசை என்பது பேச்சுமொழி. அதுதான் சிங்களம். மொழி ஆராய்ச்சியாளர்கள் சிங்களத்தை ஆயின் அடிச்சொற்கள் தமிழாயிருப்பதைக் காண்பர். இந்தப் பாசை வரிவடிவம் பெற்றதே மிக அண்மையில் தான். இந்தப் பாசைக்கு அகராதியும் இலக்கணமும் அமைந்தது, இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்தான். கண்டியரசனின் தளபதியான மொகத்தல அழகியவண்ணன் என்கிற தமிழன் தான் அதையும் செய்தவன். மனித இனத்திற்கு ஆரம்பம் ஆதாம் என்று பைபிள் கூறுவது போல, சிங்கள இனத்திற்கு ஆரம்பம் விசயன் என்று மகாவம்சம் கூறுகிறது. அவன் வந்தேறியவன் என்றும் கூறுகிறது. அதுமட்டுமல்ல ஆரிய வெறியன் வான்மீகியால் முயன்றும், மறைக்கப்பட முடியாமல் வெளிப்பட்டுத் தோன்றும் மறத்தமிழ் மாவீரன் இராவணனின் சரித்திரம், சந்திரிகாவின் சந்ததி முதல்வனுக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது சந்திரிகாவிற்குத் தெரிந்திருக்க நியாயமில்லைத்தான். சிங்களம் என்பது கூட இவர்களது சரியான இனப்பெயர் அல்ல.

சிங்களம் என்றால் பட்டைத்தீவு என்று சமக்கிருத அகராதியொன்று பொருள் தந்துள்ளதை தேவநேயப்பாவாணர் எடுத்துக் காட்டியுள்ளார். அதாவது கறுவாப்பட்டை விளையும் தீவு– சிங்களம். அங்கு வாழ்கிற மக்கள் சிங்களவர் ஆயினர். ஆனால் அன்று இலங்கையில் வாழ்ந்த தமிழர்களை யாரும் சிங்களவர்களுடன் இணைத்து அடையாளம் காணவில்லை.

இன்னொரு விடயமும் சொன்னால் அம்மாவின் சரித்திரம் எல்லாருக்கும் நன்கு புரியும். ஆங்கிலேயர் கண்டியைப் பிடிக்கிற நாட்களில் கூட, பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை, சிங்கள மன்னர்களின் அரசகரும மொழி தமிழ் என்பது தமிழர்களுக்கே தெரியாத பேருண்மை. கண்டித் தலதாமாளிகையின் அரும்பொருட் காப்பகத்துள் இருக்கின்ற சகல எழுத்துருவிலான ஆவணங்களும் உடன்படிக்கைகளும் தனித்தமிழில் தான் எழுதப்பட்டுள்ளன.

சந்திரிகாவின் இந்தத் தென்னாபிரிக்க உரையை வரிந்து கட்டிக்கொண்டு, நளின் டி சில்வா என்கிற பத்திரிகையாளன் விட்டிருக்கிற நளினக்கதையைக் கேட்டால் சிரிப்புத்தான் வருகிறது. அவர் பேசுகிற சரித்திரத்தைப் பார்த்தால், விசயன் என்கிற தறுதலையிலிருந்து சிங்கள இனம் உருவாகியது, விசயன் கடலில் காற்றினால் அலையுண்டு ஈழத்தில் கரையொதுங்கியவன் என்பது, சிங்கள இனம் வந்தேறு குடி என்று காட்டுவதால், மகாவம்சத்தையே இனி மறைக்கப் பார்ப்பார்கள் போலுள்ளது. இதைக் கேட்டுக்கொண்டு வாய்மூடிக் கிடக்குதுகள் சிங்கள அரசுடன் சேர்ந்திருக்கிற வயிறு கழுவிற சென்மங்கள். ஆரியம் நுழைந்து, தமிழ் உலகைச் சதியால் தன்கைக்குள் போடுவதற்காகப் படாதபாடு பட்டு, கடவுளின் பெயரால் எழுதிய சில காவியங்களில் ஒன்றான இராமாயணத்தில், அதன் மூலவாசிரியன் வான்மீகி என்கிற வடவன், எவ்வளவோ முயன்று இராவணனைப் பழித்துரைத்தும் கூட, அவனது சிறப்புக்களை வான்மீகியால் மறைக்கமுடியாமற் போயிற்று. அவன் ஒலியின் வேகம் கொண்ட விண்ணுந்து வைத்திருந்ததையும், அவன் பெரும் கல்விமான், நிகரற்ற இசைவல்லான் என்பதையும், இலங்கை கல்வி, கேள்விகளால் உயர்ந்திருந்தது என்பதையும், ஒன்பான் மணிகளும் தங்கமும் இழைத்த கண்ணாடிச் சுவர்களையுடைய மாளிகைகள் கட்டப்பட்டிருந்தன என்பதையும், வான்மீகி இராமாயணம் காட்டுகிறது. கி.மு. க்களில் இருந்த கடைத் தமிழ்ச் சங்கத்தில், ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள் வீற்றிருந்தார்கள் என்பதைத் சங்கத் தமிழ் காட்டுகிறது. குவேனி உயிருடன் இருந்த காலத்தில், அதாவது விசயன் கரையொதுங்கிய நாட்களில், நான்கு ஈச்சுரங்களும் ஈழத்தில் இருந்தன. நிகழ்ந்த காலம் அறியப்படாத காலத்தில் ஏற்பட்ட பிரளயத்தின் போது, ஆதியில் இருந்த கோணேச்சுரம் இடிந்து ஆழ்கடலுள் அமிழ்ந்து கிடக்கிறது. அது இன்றும் கண்ணில் தெரிந்தபடி தான் கிடக்கிறது. இந்த வரலாறு எல்லாம் உலகுக்குத் தெரியாது என்று நளின் நினைக்கிறாரா? அல்லது அவருக்கே தெரியாதா? அல்லது தெரிந்தும் இனவாதத்தைக் கக்குவதற்காக இப்படிச் சொல்கிறாரா? இத்தகையவர்கள் செய்தித் துறையில் எழுதினால், சிங்கள இனம் அழிவை நோக்கித்தான் செல்லும்.

முதல் மனிதன் தோன்றியது குமரிக்கண்டத்தில், அந்தக் குமரிக் கண்டமனிதன் தமிழன். அந்தக் கண்டம் கடலில் ஆழ்ந்தபோது குமரிக் கண்டமக்கள் சிதறி,

ஆத்திரேலியா, ஆப்பிரிக்கா, பாரசீகம் என்று பிரிந்து பரவினார்கள். பைபிள் கூறும் முதல் மனிதன் ஆதாம், அவன் தோன்றிய இடம் இலங்கை. குமரி உடைந்து தாழ்ந்தபோது மீந்த ஒரு துண்டு தான் இலங்கை, ஆகவே மனிதன் தோன்றிய நாள் முதல் இன்று வரை தமிழனின் துகள் படிந்த மண்தான், இன்றைய சிறீலங்கா எனப்படும் ஈழம். அது தமிழனின் மண் என்பதை நளின் அவசரமாகப் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழன் தன் வாழ்வுரிமையைக் கேட்பது தமிழ் இனவாதம் என்று இனக் குரோதத்தைக் கக்கி இருக்கிறார். 1958 முதல், இளைஞர்கள் முதல் துப்பாக்கியைத் தூக்கிய 1976 வரை, 18 வருடகாலச் சரித்திரத்தில் மாறிமாறி வந்த சிங்கள அரசுகள், கல்வி, வேலைவாய்ப்பு, மொழியுரிமை போன்ற உரிமைகளைத் தமிழர்களுக்குத் தொடர்ந்து மறுத்து வந்ததோடு, இனக்கலவரங்களை உருவாக்கித் தமிழர்களைச் சிதைத்த கதையெல்லாம் நளினுக்கு மறந்துவிட்டது போல் இருக்கிறது. ஆனால் உலகம் மறக்காது. மறக்கச் சரித்திரம் விடாது. சந்திரிகாவும் நளினும் சொல்வதைக் கேட்டு எள்ளிநகையாடும். பாமரச்சிங்களவர்களும், 30 புள்ளிகளில் சித்தியடைந்த சிங்களப் பட்டதாரிகளும் நம்பக்கூடும். சிலவேளை நளின் அறிந்தது அவ்வளவுதானோ யார் கண்டார்கள். பாவம் அவரும் 30ல் சித்தியடைந்தவர் தானே.

*சங்கே முழங்கு! சங்கே முழங்கு! பொங்கிவரும் தமிழ்வீரம் சிங்களப் பகையுடைத்துத் தமிழீழம் காணுமென்று சங்கே முழங்கு!*

## கலாச்சாரக் கண்ணோட்டமும் சூழற் போராட்டமும்

மேற்குறிப்பிடப்பட்ட தலைப்புக் கூறும் பிரச்சனைக்குக் காரணங்கள் பல. எதுவானாலும், ஈழத்தமிழினம் உலகெங்கும் பரவிக் கிடக்கிறது. நீக்கமற உலகின் அனைத்துநாட்டிலும் பரவிக் கிடக்கும் ஓரினம் என்றால் அது தமிழினம் தான். ஆங்கிலேயன் உலகை அடிமைப்படுத்தியிருந்த காலத்தில், தமிழர்கள் ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்கக் காடுகளிற் கூலிகளாக நிறைக்கப்பட்டார்கள். வெளியுலகத் தொடர்பே இல்லாமல் அவர்கள் இறக்கப்பட்ட நாடுகளில், மனித உருவெடுத்த விலங்குகளாக நடாத்தப்பட்டார்கள். பற்றாக்குறை உணவும், பொந்துகள் போன்ற உறையுளும், கல்வியின்மையும், உயிர் வாழும் வேட்கையை மட்டுமே அவர்களின் ஒரே குறிக்கோளாக நிலைப்பித்தது. அந்த நிலையிலும் குழுக் குழூவாகவும், குமுகாயமாகவும் வாழ்ந்த இவர்கள், தங்களது இனப்பண்பாடுகள் கெடாமல் வாழ்ந்து வந்தார்கள்.

இன்றோ அரசியல், பொருளியல் காரணங்களினால் ஐரோப்பிய, அமெரிக்கக் கண்டங்களில் பரவிக்கிடக்கும் தமிழர்கள், தாங்கள் வாழும் நாடுகளின் மொழி கலாச்சாரங்களுடன் இணைவது பெருமைக்குரியது, என்ற தவறான சிந்தனையுடன் வாழ முற்பட்டதால், இன்று தமது மனவமைதியை இழந்து வருவது அவதானிக்கப்படுகிறது. ஏறத்தாழ 15 ஆண்டுகளின் முன்பிருந்து, மேற்படி நாடுகளில் குடிபுகுந்தவர்கள், மதம் மாறியும், தமிழினப் பண்புகளுக்கு வெளியே வாழ முற்பட்ட நிலையும், தாய்மண் கலாச்சாரங்களை மறக்க முற்பட்டமையும், அன்று அவர்களைப் பாதிக்கவில்லை. இன்றோ அவர்கள் பெற்றோர்களாகிப், பிள்ளைகள் பெரியவர்கள் ஆகிவிட்ட நிலையில், அமைதியின்மைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆபத்தின் விளிம்பிற்கு வந்தபின் திணறுகிறார்கள்.

ஒரு மனிதனை, அவன் பிறந்த சூழகக் கட்டுக்குள்ளும், இனப் பண்புக்குள்ளும் வைத்திருப்பது மொழி. குழந்தை அம்மா என்று உச்சரிக்கும்போதே
தாய்மொழி அறிவு புகுத்தப்படுகிறது. அன்றே பிள்ளையைப் பெற்றோர் மொழிப்பயில்வுக்குள் கொண்டுவர வேண்டும். அதைச் செய்யத்தவறினால், சூழல் காரணமாக இயல்பாகப் பயில்கின்ற, தாய்மொழியல்லாத வாழிட மொழியில், குழந்தை உலகைக் காண ஆரம்பிக்கும். இதன் பயனாக வாழிட மொழி மூலமான சிந்தனையும், இதன்வழி வாழிடக் காலச்சாரத்தையும் குழந்தை பின்பற்ற முனைகிறது. இந்த முனைவை, தவறான கண்ணோட்டத்தில் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட பெற்றோர், பிள்ளை 14–15 வயதினை அடைகிறபோது, அதனுடைய பழக்கவழக்கங்களை ஏற்றுக்கொள்ளமுடியாமல், தாங்கள் விட்ட தவறுகளைக் குழந்தை மேல் சார்த்தி, அதைக் குற்றவாளியாக்குகிறார்கள். இதனால் பிள்ளைக்கு எதிரியாகிறார்கள். பிள்ளைக்கும் பெற்றோருக்கும் இடையில் பிளவு ஏற்படுகின்றது. பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் இருக்கக்கூடிய, உரிமை – உறவு வரம்பு பற்றிய அறிவைப் பயன்படுத்திப், பல பிள்ளைகள் பெற்றோரை விட்டுப் பிரிந்திருப்பதையும், மனதிற்கிசைந்தவர்களுடன் இணைந்திருப்பதையும் நாம் பலவிடங்களில் காண்கிறோம்.

இரண்டாவது உலகப்போரின் பின், ஐரோப்பிய நாடுகள் ஆட்புலப் பெருக்கம் நோக்கி, இளந்தலைமுறையினருக்கு, சுதந்திரம் என்ற பெயரால், சட்டங்கள் மூலம் கட்டுப்பாடுகளைத் தளர்த்தின. இவை இந்தச் சுதந்திர நாட்டில் பண்பை வளர்ப்பதற்குப் பதிலாக இளந்தாய்மார்களை உருவாக்குகின்றன. விவாகக் கட்டுக்குள்ளும் பாலியல்–கருத்து முரண்பாடுகள் காரணமாக அடிக்கடி கணவன் மனைவியர் பிரிந்து, பலதார மணங்கொள்ள ஊக்குவித்தும், திருமணமாகாமலே ஆடவருடன் கூடிப் பிள்ளைகளைப் பெற்றுத், தாயின் தந்தை பெயரை முதற்பெயராகக் கொண்ட ஏராளமான பிள்ளைகளை உருவாக்கியும், குடும்ப அமைப்புக் குலைந்து போன குமுகாய அமைப்பு உருவாகி, பெற்றோரைப் பிரிந்து, பிள்ளைகளைப் பிரிந்து, இளைஞர் இல்லங்கள், குழந்தைகள் காப்பிடங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றை வாழ்விடங்களாகக் கொண்ட ஐரோப்பியச் சூழலில், தங்கள் பிள்ளைகளை வளர்த்து வந்த பெற்றோர், தாய்மொழி, இனப்பண்பாடு, சமயம் இவற்றைப் பிள்ளைகளுக்கு ஊட்டாமல், நாகரீக மோக் வாழ்விடத்திற்குள் மூழ்கிப்போன பெற்றோர், தற்போது செய்வதறியாது திகைக்கின்றனர். தாய்மொழி அறியாத, ஓரளவு அறிந்த பிள்ளைகள், தமது விடலைப் பருவத்து வாழ்விடமொழி – கலை – கலாச்சாரத்துள், அதன்வழி குமுகாயச் சட்டங்களின்படி சிந்திக்கத் தலைப்பட்டுள்ளார்கள். பெற்றோர் கண்டிப்பின், நகர்காவலர்களைக் கொண்டு அவர்களைத் தண்டிக்க முடியும். வாழ்விற்கு சமூகசேவைத்திணைக்களம் கைகொடுக்கும், இளவல்கள் காப்பகங்கள் பாதுகாப்பு வழங்கும், என்று துணியத் தலைப்படுகிறார்கள். இப்பருவத்தை அடைகிற பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் மிகக் குறைவாக இருப்பதால், இப்படியான செய்திகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காதில் விழுகின்றன. இன்னும் 10 ஆண்டுகளின் பின் நூறுசதவிகிதக் குடும்பங்களிலும் இந்நிலை தோன்றக்கூடும்.

உலகிற் தோன்றிய ஒரு உயிர்ப்பின் முதற்காரியம் பாலுறவு. அடுத்தே உணவும் மற்றவைகளும். 12–13 வயதடைகிற பிள்ளைகள், பாலுணர்வின் கிளர்வுகளை இயற்கை தர, அதை அடையத் துடிக்கிற பருவத்தவர்கள். தாயகத்தில் அத்தகைய உணர்வுகள் தோன்றினாலும், அதை இனங்காண முடியாமலும், இனங்கண்டாலும்

உறவுகளின் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளுக்கும், அவமதிப்பிற்கும் பயந்து, அவ்வுணர்வை அடக்கி வாழ்ந்தார்கள். இங்கே அந்த உணர்வைப் பெறுகிற பிள்ளை, அதைத் தான் விரும்பியபடி நுகரலாம் என்கிற சட்டவறிவோடு, நாளேடுகள், இதழ்கள், விளம்பரங்கள், தொலைக்காட்சிகள் மூலம், அந்த உணர்ச்சிகளை எப்படித் தணிக்கலாம், தணிக்கும் முயற்சியில் தீங்கு விளையாமல் எப்படிப் பாதுகாப்பது, என்பன ஒளிவு மறைவு இன்றி மிகத் தெளிவாக கண்டு தெளிகிறது. 11–12 வயதுப் பிள்ளைகளுக்கு பாலுறுப்புகளின் அமைப்பு முறை, பாலுறவின்போது அவற்றின் செயற்பாடுகள் பற்றிப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகிறது. பாடசாலைக்கு வெளியே வந்தால், தெருக்கரையில் கன்னியரும் காளையரும் கட்டியணைத்து முத்தத்தில் உலகை மறந்திருக்கிற காட்சி. இவைகள் எங்கள் பிள்ளைகளுக்கு இயல்பூக்கங்களைத் தூண்டிவிட, அந்தப்பிள்ளை அதை துய்ப்பது தனது உரிமை என்றும், அதுவே பேரின்பம் என்றும், மற்றவர்கள் அதைக் கட்டுப்படுத்தமுடியாது என்றும் கருதுகிறது. இச்சிந்தனை தவறு என்று யாரும் வாதிடமுடியாது. சங்ககாலத்தில், இச்சிந்தனை எழுந்தபோது, பெண் பெற்றாரை எதிர்த்துத் தான் விரும்பியவனுடன் கூடிக்கொண்டு ஓடுகிறாள். இதை ஒருவழித்தணத்தல் என்று அகத்துறை இலக்கியம் புகழ்ந்து போற்றும். நம்காலத்தில் கூடிக்கொண்டோடுதலும், காதலர்கள் தற்கொலை செய்வதும், சர்வசாதாரணமாகக் காணப்படும் ஒன்றாகும். இதைவிடப் பண்பாடுபேசும் தமிழர்களுடைய ஒளிநாடகங் (திரைப்படங்)களைப் பார்த்தால் எந்தப் படமாயிருந்தாலும் கதாநாயகி கட்டறுத்துக் கொண்டு, உடையில் வறுமையைக் காட்டிக்கொண்டு, ஐரோப்பியக் கன்னியர்களை விட, வெகு திறந்தவெளி அரங்கமாக ஓடுகிறாள். இந்தத் தமிழ்ப் படங்களுக்கு நாங்கள் ஐரோப்பாவில் பெரும் சந்தை ஏற்படுத்தியிருக்கிறோம். தமிழ் மொழி பேசப்படுவதால், அப்பா அம்மாவுக்கு இந்தப் படங்கள் பாதகமில்லை என்று தோன்றுகிறது. உண்மை என்னவென்றால் தமிழ்ப்படங்கள் தான் மிகமிகக் கடுமையாகப் பிள்ளைகளைத் தாக்கும் நோய்க்கிருமி. அப்படியிருக்க, பிள்ளைகள் தாங்கள் வாழும் சூழலில், நியாயமாக்கப்பட்ட விடயங்களைப் பின்பற்ற எண்ணுவது குற்றமல்ல. அதைத் தவறென்று கருதித் தண்டிக்கமுற்படுவது தான் தவறு. இத்தவறைப் பல பெற்றோர்கள் செய்ததால், பல இளங்கன்னிப் பெண்கள் காதலருடன் ஓடிக் களித்ததும், பின் கைவிடப்பட்டு இளவல்கள், காப்பகங்களில் புகலிடம் பெற்றிருப்பதும் சாதாரணச் செய்திகள். இந்தச் செய்திகளைக் கண்ட விடலைப் பருவத்துப் பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோர் கலங்கத் தொடங்கியுள்ளனர். வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களின் நிகழ்காலப் பிரச்சனைகளுள் இதுவே முக்கிய பிரச்சனையாகும். பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதும் சிரமமாகவுள்ளது. கட்டுப்படுத்தாமல் விட்டாலும் அது அவர்களின் நலன்களை அழிக்கக்கூடும். குமுகாயப் பண்பாடு சீரழிந்து போகும். இதற்கு மாற்று மருந்தென்ன? இன்றைய பெருங்கேள்வி இதுதான்.

இதுபற்றிக் கமலம் தன் எண்ணத்தைத் தருகிறது. கற்றோர் சிந்தித்து, ஆதாரங்களுடன் அறிவியல் வழி, தங்கள் கருத்துக்களை விவாதத்திற்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

எங்களுடைய வாழ்வில் 50 வருடங்களுக்கு முன்பு பார்த்தால், இன்றைய முதியோர் குழந்தைகளாக இருந்த நாட்களில், இருபாலாரும் ஐந்தாறு பேர் கூடி

விளையாடுவார்கள். சோறு கறி காய்ச்சி, அம்மா அப்பா சோடி போட்டு, திருமண நிகழ்வுகள் செய்து, பெரியவர்கள் மாதிரி உடுத்தி, இப்படியெல்லாம் விளையாடுவார்கள். பின்னாளில் நாகரீக உலகியல் நுழைவும், இலவசக் கல்வியால் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியும், பெருகிவந்த பொருளியல் – அரசியல் நெருக்கடிகளும், இந்தச் சிறுவர் சிறுமியரின் கூட்டு விளையாட்டை, குமுகாயத்திலிருந்து அகற்றிவிட்டன. எண்ணிப் பார்த்தால்! அந்த விளையாட்டுகள் எல்லாம் விளையாட்டுத்தானா? இல்லை. அது பட்டறிவின் ஊடாக, அவர்களிடம் ஏற்படுகின்ற உளவியல் சார்ந்த வெளிப்பாடுகள் தான். இந்த வெளிப்பாடும், அதன் அனுபவமும், அவர்களுடைய உள்ளத்தில் குடும்பம், பிள்ளைகள், திருமணம், ஆண்பெண் உறவு போன்றவற்றில் ஒரு நல்லுணர்வை, கட்டுப்பாட்டுணர்வை வளர்க்கின்றது. அதனால் அவர்கள் வாழ்வில் குமுகாயப் பண்பாட்டு வரம்பிற்குள், தாமாகவே கண்டுணர்கிறார்கள். இன்றோ தாய் நாட்டிலும் சரி, புகலிடங்களிலும் சரி அந்தச் சூழ்நிலை இல்லை. எனவே பிள்ளைகள் சூழ்நிலைக்கேற்ப, தங்கள் வாழ்க்கைக் கோலங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். இதுவே அவர்களை இனப்பண்பாட்டிற்கு வெளியேயும், பெற்றோரின் கட்டுப்பாட்டுக்கு வெளியே செல்லவும், பாலியற்கிளர்வுகளை ஏற்றுக்கொண்டு இன்பம் துய்க்கவும் தூண்டுகிறது. இதைத் தவறு என்று கூறமுடியாது என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

*12 –13* வயதுகளிலேயே இயற்கை, பாலுறவு கொள்வதற்கு உடலைத் தயார்ப்படுத்திவிடுகிறது. அதாவது இயற்கையின் நீதிப்படி பூரணமான உயிரின்பத்தை துய்ப்பதற்கு, உடல் தூண்டல்களைப் பெற்றுவிட்டது. எனவே உடம்பிற்குரிய உயிர் அந்த இன்பத்தை விழையும். எல்லா உயிரினங்களும் இந்த இன்பத்தை விரும்பியதும் பெறலாம். ஆனால் மனிதனுக்கு மட்டும் இலகுவில் அந்தச் சுதந்திரம் கிடைப்பதில்லை. அதிலும் தமிழினத்திற்கு அந்தச் சுதந்திரம் முற்றாகவே மறுக்கப்படுகிறது, பண்பாடு என்னும் பெயரால். அந்தக்கொடுமை நீக்கப்படவேண்டும் என்பது உண்மையாயினும் அதற்காகக் கட்டவிழ்த்து விடும்படி நான் கூறவில்லை. கட்டறாமலும் கட்டறுக்காமலும் அது நீக்கப்பட, நாம் சிந்தித்து ஆவன செய்தல் வேண்டும்.

தாய்தந்தையர் தங்களது போக்கிற்கேற்பவும், தங்களது எதிர்காலத் திட்டங்களுக்கு ஏற்பவும், மனதிற்கினிய நட்புடைய குடும்பத்தவர்களுடன் இணைந்து, தங்கள் வயதளவில் இணையக்கூடிய ஆண் பெண் குழந்தைகளை, சிறுவயதிலிருந்தே சேர்ந்து இயங்கவும், ஒரே பள்ளியில் பயிலவும், பொழுது போக்குகளில் அவர்கள் சுயமாக இணைந்து மகிழவும், ஓய்வு நேரங்களை ஒன்றாகப் பயன்படுத்தவும், தங்களது வழிநடத்தலில் அனுமதிப்பது நன்று. அவர்கள் வளரும் போதே தங்கள் உள்ளங்களையும் நட்பையும் வளர்த்துக்கொள்வதோடு, எதிர்ப்பாலாரின் இளமைமுதலான தொடர்பு, இயல்பான மகிழ்நிலையை மனதில் ஏற்படுத்தியிருப்பதால், ஒருவரோடு ஒருவர் உரையாடி மகிழ்வதிலேயே, அவர்களுடைய பாலுணர்வுக் கிளர்வுகள் தாமாகவே உரிய தருணம் வரை உடைப்பெடுக்காமல் அடங்கும். வாலிபத்தைக் கடந்து வந்த பெறறோர், தங்கள் இளமையை ஒருதடவை எண்ணிப் பார்த்தால் இந்த உண்மையை உணர்வர்.

எனவே, பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு எதிர்ப்பாலாரின் ஒழுங்கான நட்புத் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களுக்கு காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ற வாழ்வியலை ஒழுங்கமைக்கவேண்டும். அப்படி நட்புக்குள்ளாக்கப்படும் குழந்தைகள் உரியபருவம் வருகின்ற போது, தாங்கள் வாழ்க்கைத் துணைவர்களாகப் பெரும்பாலும்

இணைந்துகொள்வார்கள். அப்படி இணையத் தவறினாலும் நல்ல நண்பர்களாக வாழ்ந்து, தங்கள் வாழ்வுக்கு ஒரு பாதுகாப்பைத் தேடிக்கொள்வார்கள் இன்றைய நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உருவாகியுள்ள, எதிர்காலம் பற்றிய பல பெற்றோரின் மனநெருடல்களை அடிப்படையாகக் கொண்டு, கமலம் தன் எண்ணத்தைக் கூறி. இந்த விவகாரத்தில் கற்றோர் தங்கள் கருத்துக்களை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

என்னினிய தமிழன்பர்களே!
உங்கள் தமிழ்ப்பசிக்கு விருந்து படைக்க, இனிய நறுந்தமிழில் வாழ்த்துப்பாடல்கள், போற்றல்கள் , இறைஞ்சல்கள்(அஞ்சலி) கல்வெட்டுக்கள், எதுவானாலும், தனித்தமிழ் உணர்வைப் பேணும் வகையில் கமலம் மலிவாகச் செய்து தரும். வேண்டியோர் முத்திரை ஒட்டிய மடலுறையுடன் தொடர்பு கொள்க!

அண்ணாவழி

## கம்பரசம்

ஆரியச் சதியின் கருவியான இராமாயணம் எப்படித் தமிழனை ஏமாற்றுகிறது, அந்த ஆபாசக் கதையை தமிழன் பாராயணம் பண்ணுகிற வேதனையை, அசிங்கத்தை நீங்களும் கண்டறிய அண்ணாவழிக் கம்பரசம் தரப்படுகின்றது.

கம்பர் ஒரு நாள் அயோத்தியை அடுத்துள்ள சோலைக்குச் சென்றார். அந்தச் சோலை இராமன் காடேகும் கட்டத்தில் நகர்நீங்கு படலத்தில் வருகின்றது. இந்த இடம் மிகச் சோகமயமானது. அதைப் பாடவரும்போது கம்பரின் உள்ளம் வேதனையால் துவண்டிருக்கும். அதனால் அந்தச் சோலையிலே, அழகிய மலர்கள் பூத்துக் குலுங்கும் செடிகொடிகளை, தேன்நாறும் குளிர்த் தென்றலை, அவரால் இரசிக்க முடியாது தான். ஆனாலும் இப்படிப் பூத்துக் குலுங்கிக் கிடந்த இராமனும் சீதையும் இப்படியானார்களே, என்று இரங்கிப் பாடியிருக்கலாம். ஆனால் அந்தச் சோகத்திடையிலும், இயற்கையின் அழகை இரசிக்க முடியாத வேதனையிலும் கம்பரின் கண்கள் அந்தச் சோலையில் கண்டதென்ன?

இராமனுடன் நகரைவிட்டுப் புறப்பட்ட மக்கள் நடைக் களையால், பசிக்களையால் அந்தச் சோலையிலே சோர்ந்து கிடக்கிறார்கள். அந்த மக்களிடையே கம்பரின் கண்களில், பெண்கள் மட்டுமே தெரிகின்றார்கள்.

டோஸ் 8ல் குரும்பையனைய, அரும்பனைய முலைகளைப் பாடிய கம்பர், அத்துடன் விடலாமா? அது நீதியாகாதே என்று, பாலூட்டுகின்ற முலைகளையும் பாடுகின்றார். அயோத்திய காண்டம் தைலமாட்டுப்படலம் 13 ம் பாடலின் கடைசி வரியைப் பாருங்கள். மகவு முலைவருட இளமகளிர் துயின்றார் அதாவது தாயிடத்திலே பால் குடிக்கின்ற குழந்தை முலைகளைக் கையால் வருடிக் கொண்டிருக்க, தாயராகிய இளம் பெண்கள் துயில்கின்றனர். வருடல் என்பது தடவுதல் என்று பொருள் தரும். எனவே அந்தத் தடவலில் தாயர் சுகமாக உறங்கினர். கம்பனின் கற்பனையின் அசிங்கத்தைப் பார்த்தீர்களா!!

அதே படலம் 16 ம் பாடலைப் பாருங்கள்
குங்கும மலை குளிர்ப்பனி குழுமியென்னத்
துங்கமுலையிற் றுகளூறச் சிலர் துயின்றார்.
பொருள்-- சிலர் – சில மாதர்கள், குங்கும மலை – குங்குமப் பூக்கள் நிறைந்துள்ள மலையிலே, குளிர் பனி குழுமியென்ன – குளிர்ந்த பனி படிந்தது போல, துங்கமலையில் – பருத்த கொங்கைகளிலே, துகளூற – புழுதி படிந்திருக்க, துயின்றார் – உறங்கிக் கிடந்தார்கள்.

அந்த மக்கள் சீதாபிராட்டியுடன் எம்மினிய இராமன் 14 வருடங்கள் காட்டில் வாழச் சொல்கிறானே, என்றேங்கிக் கத்திக் கதறிக் களைத்துக் கிடக்கிறார்கள், கம்பனோ இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் இனி இப்படியொரு வாய்ப்புக் கிடையாது என்பது போல் சனக் கூட்டத்திடை நுழைந்து, எந்தெந்தப் பெண்ணுக்கு எப்படி எப்படிப்பட்ட மார்புகள், நிறமென்ன, தூசி படிந்தள்ளதா? என்றெல்லாம் தேடிப் பாடியிருக்கிறான் என்றால், கம்பனின் ரசனையைப் பாருங்கள். இதைப் பாராயணம் பண்ணுகிற பக்தன், அந்த வரிகளிடம் வருகிறபோது, பக்கத்தில் நிற்கும் பாவையின் முலைகளை ஒப்பிட்டுப் பார்ப்பானா? இல்லை இறைவனை எண்ணி நெஞ்சம் நெக்குருகி நிற்பானா? இராம தரிசனம் தேடிப் பாடும் பக்தன், கொஞ்சம் இரசித்துப் படிக்கட்டும் என்று, கம்பன் எண்ணினான் போலும். துங்கமாய், குங்குமமலையாய் காட்டினான்

மலையிலே நதிகள் உற்பத்தியாகி, துள்ளிக் குதித்து, வழியிலே பூக்கள், பழங்கள், இலைதழைகள், குப்பைகள் இப்படி வண்டல்களை அடித்துக் கொண்டு வரும். வழியெல்லாம் பல காட்சிகளை வளப்பித்துக் கொண்டு வந்து, கடைசியிலே கடலிலே போய்ச்சேரும். இந்தக் காட்சியைப் பல புலவர்கள் தங்கள் கற்பனை வளத்தால் கற்போர் களித்திடும் வண்ணம், சொற்களில் வடித்துத் தருவார்கள். உவமையணிகளாலும் உயர்வு நவிற்சியினாலும் காட்சியை மிகைப்படுத்திக் கூறி, கற்போர் மனதில் தம் கற்பனைத் திறத்தால் நிறைவர். ஆனால் கம்பனோ அந்த இனிய இயற்கையைக் கூட, காமச் சுவையுடன் தான் காண்கிறான். அத்தகைய காமாந்தகாரன் கம்பன். எத்தனையோ புலவர்கள் எழிலுறப் பாடிய, இந்த ஆற்று விடயத்தைக், கம்பன் எதற்கு உவமிக்கிறான் என்று பாருங்கள். இராமன் காடு செல்வதைத் தாங்காமல் அயோத்தி அழுததாம் பூவையரும் அழுதனராம். பூனையும் அழுததாம். பூனை ஏன் அழுதது என்று நான் கம்பனைக் கேட்கவில்லை. சிலசமயம் அதுவும் அவதாரப் பூனையோ யார் கண்டார்கள். சோகக் காட்சியை மிகைப்படுத்துவதற்காகக் கூறினான் என்று விட்டுவிடுவோம். அயோத்தி மக்களின் கண்ணீர், தேரோடும் வீதியெல்லாம் வழிந்தோடியது என்று பாடுகின்றார். கண்ணீராவது ஆறாக ஓடுவதாவது, என்ன பாடுகிறாய் என்று நான் கேட்கவில்லை. உயர்வு நவிற்சி புலவனின் உரிமை என்று விட்டுவிடுகிறேன். ஆனால் நான் இனிக் கூறப்போகும் பாடலை, மானத்திலும், நாகரீகத்திலும், கடவுட் கொள்கையிலும் நம்பிக்கை யுடையவர்கள் பொறுத்துக் கொள்ள முடியுமா, என்று எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

அயோத்தியாகாண்டம், நகர் நீங்கு படலம், 184 வது பாடல்-

திடருடைக் குங்குமச் சேறும் சாந்தமும்
இடைமிடை வண்டலிட்டு ஆரமீர்த்தன.
மிடைமுலைக் குவடு ஒரீஇ மேகலைத் தடங்
கடலிடைப் புகுந்தது கட்கலுழி யாறரோ!

கம்பன் பாட எடுத்துக் கொண்ட விடயம், பெண்களின் கண்ணீர் பெருகியது என்பது தான்.

பாடலிள் பொருள்- கட்கலுழியாறரோ இதைப் பதம் பிரித்தால், கண் கலுழி ஆறு அரோ என்று வரும். அரோ என்பது அசை. அசை மட்டுமல்லாமல், என்னசெய்வது என்று புரியாமல், கம்பன் வியந்து கூவிய சத்தம்.. பெண்கள் அழுவதில் அப்படி என்ன வியப்பற்குரிய விடயம் என்று கேட்பீர்கள். பாடலின் பொருளைப் பாருங்கள்: கம்பன் ஆனந்தக் கூச்சலிட்ட காரணம் புரியும். கட்கலுழியாறு - கண்களிலிருந்த புறப்பட்ட கலங்கல் நீராலான கண்ணீர் ஆறு, திடருடைக் குங்குமச் சேறும் சாந்தமும் - மார்பிலே அப்பியிருந்த சந்தணக் குழம்பையும் குங்குமத்தையும். இடைமிடை - நடுநடுவே, வண்டலிட்டு - சேறாகச் சேர்த்துக் கொண்டு, ஆரமீர்த்தன -முத்துமாலைகளை இழுத்தன.. இந்த இரண்டு வரிகளின் பொருள். பெண்களின் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர், அவர்கள் மார்பிலே பூசியிருந்த சந்தனத்தையும் குங்குமத்தையும் கரைத்து, அது முத்து மாலைகளில் தடைப்பட்டு மாலைகளை இழுத்தது. இந்தளவும் அருமையான கற்பனைதான். மிகுதி இரண்டு அடிகளின் பொருளைப் பாருங்கள். இந்தக் காவியம் பாவவிமோசனம் தருமா என்று.

கட்கலுழி ஆறு சந்தனக் குங்கும வண்டலோடு எங்கே சென்றது. மிடை முலைக் குவடு ஒரீஇ - (ஈர்க்கு இடை பெயராத) இடைமீடு இன்றி ஒன்றோடொன்று நெருங்கியிருக்கின்ற முலைகளாகிய மலைச் சிகரங்களில் நின்றும் நீங்கி, மேகலைத் தடங்கடலிடைப் புகுந்தது - மேகலை என்ற அணிகலன் அணியப்பட்டுள்ள அல்குல் (பிறப்பு உறுப்பு) என்னும் அகன்ற பெருங் கடலிடைப் புகுந்தது.

சந்தனத்தையும் குங்குமத்தையும் கரைத்துக்கொண்டு, முலைகளின் மேலால் ஏறிப் பாய்ந்து, மேகலை அணியப்பட்டிருந்த பெரிய பெண்குறியுள் புகுந்தது. இப்படி எந்த மொழி இலக்கியத்திலே, எந்தக் கடவுட் கதையிலே பாடியிருக்கிறார்கள். உலகிலேயே இராமாயணத்தைத் தவிர வேறு எந்தக் கதையிலும் காணமுடியாது. இந்தக் கதையைப் படித்தால், சனி தோசம் நீங்கும் என்று 1998லும் எழுதுகிறான் தமிழகத்துச் சோத்துமாட்டுத் தமிழன். மரமண்டைகளே எப்போது தான் திருந்தப்போகிறீர்களோ!

அன்பர்களே! அல்குல் வாமமேகலை இறவளர்வதும், ஒருபுறத் தளிப்பதும், தடங்கடலிடைப் புகுவதும் படித்தால் புண்ணியம் கிடைக்குமா? கலையுணர்வு பிறக்குமா? அன்றி தொந்தி சரிய, வெளிறிப்போன தொண்டுகிழமாயினும், மங்கையர் மலரடி தடவி பல பல புரியத் தூண்டும் மயக்கத்தைத் தருமா என்று எண்ணிப்பாருங்கள்!

## டோஸ் 8

அன்பர்களே! கம்பர் இராமனுடைய கதையை எழுதியதில் ஒரு மகிழ்ச்சி. கவிதையின் பெயரால் கம்பர் காவியத்தில் காமக் கள்ளைப் பொழிகிறார். சாதாரணக் கதையிலேயே இப்படிக் காமத்தைப் பொழிகிறாரே, அந்தக் கண்ணன் என்கிறவனின் தீராத விளையாட்டுக்களைப் பாடியிருந்தால் எப்படிப் பாடியிருப்பார். மங்கையர்கள் நீராடிக் கொண்டிருக்க, அவர்களின் ஆடைகளைக் கவர்ந்து சென்று மரக்கிளைகளிலே தொங்கவிட்டு விட்டுக், குழலூதி மகிழ்ந்திருக்க, மங்கையர்கள் கண்ணா! மணி வண்ணா! ஆடைகளைத் தந்துவிடு என்று கதற, என்னைக் கைகூப்பித் தொழுதால் மட்டுமே தருவேன் என்று கண்ணன் சொல்லக், கண்ணா! நாங்கள் நீராடை போர்த்துள்ளோம். நிர்வாண மேலுடலைக் கைகளால் போர்த்துள்ளோம், எப்படிக் கும்பிட முடியும், தா கண்ணா! என்று மன்றாட முடியாது, இந்த நிலையிலேயே கும்பிடவேண்டும் என்று கட்டளையிட்டான் கண்ணன். என்றொரு கடவுட் கதை இருக்கிறதே, எண்ணிப் பாருங்கள். மார்பளவு தண்ணீருள்ள தடாகத்திலே குளிக்கிறார்கள். நேரமோ பகற்பொழுது. தண்ணீரும் கண்ணாடி தான். நீருக்குள் இருப்பதைத் தெளிவாகக் காட்டும். கண்ணன் இருப்பதோ மரக்கிளையில். பளிங்குத் தடாகத்தில்நிர்வாணமாக நீராடும் மங்கையரின் நிர்வாணக் கோலத்தை எப்படிக் கண்டிருப்பான். இந்தக் காட்சியைக் கம்பர் பாட முற்பட்டிருந்தால் எப்படிப் பாடியிருப்பார். ஆடைக்குள் இருப்பதையே அம்பலமாக்கிப் பாடுபவர், அம்பலத்தில் கிடப்பதை எப்படிப் பாடியிருப்பார். பாகம் பாகமாக, பக்கம் பக்கமாக, புரட்டி நிமிர்த்தி வீடியோ எடுத்தல்லவா பாடியிருப்பான். தப்பினர் ஆயர்பாடிப் பெண்கள்.

நீண்ட காலத்திற்கு முன்பு இங்கிலாந்திலே வெண்டர் என்று ஒரு பிரபு வாழ்ந்தான். கடினசித்தம் படைத்தவன். குடிகளுக்கு வரிமேல் வரி விதித்தான். மக்கள் சொல்லொணாத் துயரில் கதறினர். அவனோ அது பற்றிக் கவலைப்படாமல், உல்லாசமாக வாழ்ந்துகொண்டிருந்தான். அவன் மனைவியின் பெயர் கடிலா. அவள் இரக்க சிந்தை கொண்டவள். அவள் கணவனிடம் சென்று மக்கள் படும் துயரை முறையிட்டாள். கணவன் அவளுடைய முறைப்பாட்டை நிராகரித்தான். கடிலா விடாமல் முயன்றாள். கோபங்கொண்ட கணவன் நீ இந்த மக்களுக்காக சிரமப்படாதே போ! என்றான். அவள் மக்களுக்காக என்னாலான எதையும் செய்வேன் என்றாள். எதையும் செய்வாயா? அப்படியானால், நிர்வாணமாகக் குதிரையேறி, நகரை வலம் வா வரிகளை நீக்குகிறேன் என்றான். கணவனின் நிபந்தனையைக் கேட்டு மனம்புழுங்கிய கடிலா, எண்ணிப் பார்த்தாள். சரி மக்கள் துயரம் நீங்கவேண்டும் என்பதற்காகக் கடிலா நிர்வாணமாக குதிரையில் நகர் வலம் வந்தாள். இந்தக் கதையைப் பாடவேண்டிய நிலை ஆங்கிலக் கவிஞன் டெனிசனுக்கு ஏற்பட்டது..

அவள் குதிரைமீது சென்றதைக் கூறுகையில், கற்பெனும் ஆடை பூண்ட அவள் குதிரை ஏறிச் சென்றாள். இரும்பனைய நெஞ்சுடையார் பரிசளித்த இடையணியைக் களைந்தாள். கணமொன்று கவலைகொண்டாள், முகிலிடையே கோடை நிலவாக நின்றாள்.

ஒரு உத்தமி நிர்வாணமாய் ஊர்வலம் வந்ததை டெனிசன் எவ்வளவு நாகரீகமாக நயமாகப் பாடியுள்ளார். அவரை உலகம் போற்றுகிறது.. இங்கே ஆரிய அடிவருடிகள் போற்றும் கம்பனோ, உலகநாயகியின் அவதாரமாகிய சீதையின் ஆடைக்குள்ளே அறுந்தது என்ன? வளர்ந்தது என்ன? அவளுடைய அன்பர்களாகிய

பெண்களின் மேல்கீழ் அளவுகள் என்ன? கன்னியர்க்கு என்ன மாதிரி, அன்னையர்க்கு என்னமாதிரி, வயது முதிர்ந்த பெண்களுக்கு என்ன மாதிரி, அவை எதுக்கெதுக்கு உவமை என்று, ஆடைக்குள் புகுந்து பார்த்துப் பாடுகிறார். டெனிசன் பாடிய அந்தக் கதையைக் கம்பன் பாடியிருந்தால் எவ்வளவு காமச் சுவையைத் தந்திருப்பார் என்று எண்ணிப் பாருங்கள்.

டெனிசன் பாடிய முறை ஒழுக்கத்தையும் உயர்ந்த எண்ணத்தையும், பெண்களின் மேன்மையையும் உயர்த்துமா? வாமமேகலை அற வளர்ந்த அல்குலையுடையவள் சீதை என்பது எண்ணத்தை உயர்த்துமா?

உலகில் சிறந்த இனம் – உயர்ந்த இனம் – நாகரிக மேம்பாடுற்ற இனம் என்றெல்லாம் சொல்லிக் கொள்கிறோமே, அந்த இனத்தின் இலக்கியத்துள் இப்படிக் காமக்குப்பைகள் கொட்டிக் கிடக்கின்றன.. இந்தக் கதையைத் தமிழகம் பாராயணம் பண்ணுகிறது. கேவலத்திலும் கேவலம். அதுவும் இராமாயணத்தைக் கொளுத்து என்று போராடியவர்களே ஆட்சியில் இருக்கும் இன்றும் கூட, அது பாடநூலாகவும் பாராயண நூலாகவும் இருப்பது வெட்கக்கேடு. தமிழீழத்திலும் இது பாடநூலாக இருக்கின்றது. சம்பந்தப்பட்டோரை இதைப் பாடத்திட்டத்திலிருந்து நீக்கிவிட வேண்டுகிறேன். தமிழனைத் தாழ்த்தும் எந்த இலக்கியங்களும் கல்வித் திட்டத்தில் இடம்பெறலாகாது. அதிலும் வேற்றின மொழி மாற்று இலக்கியங்களுக்கு முதலிடம் தரக்கூடாது. இராமன் காட்டுக்குப் போனால் என்ன? சீதை தீக்குளித்தால் என்ன? கற்பிழந்தால் என்ன? தமிழனுக்கு என்ன வந்தது.

சிறந்த பாநயம் கொண்டதுகம்பராமாயணம், அதனைப் படித்துச் சுவைக்கக் கூடாதா? என்று சிலர் கேட்கக்கூடும். உண்மைதான் படித்துச் சுவைக்கவேண்டிய பாநயம் கொண்டது தான். படித்துச் சுவைக்கலாம். ஆனால் கற்றுத்தெளிந்தோர் அதைப் படித்துச் சுவையுங்கள். புரிந்துகொள்ளமுடியாத பருவத்து மாணவச் செல்வங்களுக்கு அது தேவையில்லை. தீங்கு விளைக்கும்.

நீதிக்கும் குமுகாய ஒழுங்கிற்கும் என்று திட்டமிட்டு எழுதப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களை, சங்கத்தமிழை, பாடத்திட்டங்களுக்குள் கொண்டுவந்து, தமிழ்ப்பண்பாட்டை, தமிழர் நாகரீகத்தை எதிர்காலத் தலைமுறைக்கு அடையாளம் காட்டுமாறு வேண்டுகின்றேன்

## வெட்கப்படட்டும் சுதந்திரதேவி

ரீகன், புஷ், கிளிங்ரன் போன்ற
டிறர் நோகத் தான்மகிழும் பிள்ளைகளைப் பெற்றதால்
வெட்கப்படட்டும் சுதந்திரதேவி
செல்வரதன்: – தமிழ்நாடு

# பெயர்

ஒரு மொழியின் மூலநிலை பெயற்சொற்களாகும். அச்சொல் தான் இடைநிலை – சாரியை– உரிச்சொல் – உருபுகள் என்ற அலகுகளைச் சேர்த்துக் கொண்டு, நீண்டும் குறுகியும் பல்வேறு வகைப்பட்ட இலக்கண வடிவங்களைப் பெறுகின்றது. அதனால் தான் ஒவ்வொரு பொருளையும் குறிக்கும் சொல் பெயர் என்றாயிற்று. பெயரைச் சொன்னவுடனேயே, என்னபொருள், அஃறிணையா உயர்திணையா – உயிருள்ளதா சடப்பொருளா என்ற எல்லாவிதமான உணர்வுகளையும் பெறுகின்றோம். அதிலும் சிந்தனை வளமுள்ள மனித இனத்தின் பெயர் மிக மிக முக்கிய இடம் பெறும். (இதுசம்பந்தமாக முன்னர் கமலத்தில் இடம்பெற்ற கட்டுரை மீண்டும் இதன்கீழ் வெளியாகிறது.) கமலம் இதுபற்றிச் சொன்னதைப் பலரும் கேட்டிருக்கமாட்டார்கள் கேட்டிருந்தாலும் அதுபற்றி கவலைப் பட்டிருக்கமாட்டார்கள். வெளிநாடுகளில் வாழுகின்ற எம்மவர்கள், தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டும் பெயர்களைப் பார்த்தால், எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள், எந்த இறைநெறியைச் சேர்ந்தவர்கள், எந்த மொழி பேசுபவர்கள் என்றுகூடப் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்தக்குழந்தைகள் மனிதக் குழந்தைகள் தானா என்றுகூட அடையாளம் காணமுடியவில்லை. தன் இனம் சுட்டும் பெயரைக் கொண்டிராதவன் தன் இனவுணர்வாகிய உயிருணர்வையே இழக்கிறான். அதனால் மனிதப் பண்புகளையே இழப்பான். அது இழக்கப் படுகிறபோது, குடும்பப்பண்புகள் பற்றுக்கள், அதனுடைய உள்ளத்தில் தோன்றாமல் போய்விடும். இந்நிலை அந்தக் குழந்தையை சமூகப் பொருத்தப்பாடற்ற மனிதனாக்குகின்றது. அவன் உலகிற்கு இடையூறானவனாய், வாழ்வை இழக்கிறான். எனவே, பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குத் தூயதமிழில் பெயர் சூட்டவேண்டும். தற்கால நாகரீகக் கோலங்களுக்குப் பெயரில் ஒரு புது மெருகு வேண்டும் என்று, எப்படியெல்லாமோ பெயர் சூட்டுகிறார்கள். இது பரிதாபம். இனிய தமிழில் இன்றைய நாகரீக நிலைக்கேற்பப் பெயர்கள் சூட்டமுடியும் என்பதைப் போதிய மொழியறிவின்மை காரணமாகத் தமிழர்கள் உணரவில்லை. எனவே தான் கமலம் பெயர் தேடித் தரும் பணியில் முயல்கிறது. தங்கள் குழந்தைகளுக்கு இனிய தமிழ்ப்பெயர் சூட்ட விரும்புவோர், கமலத்துடன் தொடர்பு கொள்க! உங்களுக்கு வேண்டிய இறைநெறி , நீங்கள் விரும்புகிற முதலெழுத்து, என்ற விபரங்களுடன் முத்திரை ஒட்டிய மடலுறையுடன் தொடர்பு கொள்க.

உதாரணத்திற்குச் சில பெயர்கள்

| *பெண்* | *ஆண்* |
|---|---|
| பாகி | மதுரன் |
| அனிச்சா | மானன் |
| மகிழா | நிர்த்தனன் |
| நிர்த்தனா | மறலி |
| மலரா | அறிவன் |

# தாலாட்டு

ஆராரோ ஆரிவரோ! ஆராரோ ஆரிவரோ! முத்தான முத்தல்லவோ முதுகடலின் ஆணிமுத்தோ! குழந்தையைத் தூங்க வைப்பதற்குத் தாய் பாடுகிறார். இதை நாங்கள் தாலாட்டு என்கிறோம். இந்நாளில் விதம்விதமான தொட்டில்கள். இயந்திரத் தொட்டில்கள் வந்துவிட்டன. அவை தாமாகவும் ஆடும், தாய் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டே ஆட்டும் முறையிலும் தொட்டில்கள் இருக்கின்றன. முன்னாளில் வசதி படைத்தோர் அழகிய தொட்டில்களைச் செய்தும், ஏனையோர் துணியில் ஏணை கட்டியும், குழந்தைகளைப் படுக்கவைத்து பாடிக்கொண்டு ஆட்டுவார்கள். தால்– தொங்குதல். தாலாட்டு –தொங்கவிட்டு ஆட்டுதல். ஆதலால் ஆகுபெயராக தொங்கும் ஏணையை ஆட்டும் போது, பாடும் பாடலையே தாலாட்டு என்கிறோம்.

தாலாட்டுப்பாடல் குழந்தை தூங்குவதற்குப் பாடப்படுவதாக நாங்கள் கருதுகின்றோம். ஆனால், பண்டைத் தமிழன் அறிவியல் அடிப்படையிலேயே தாலாட்டை வழிப்படுத்தியுள்ளான். தாலாட்டில் ஒரு மனித உருவாக்கம் இருப்பதை அவன் அறிந்திருந்தான்.

தாலாட்டைப் பாடும்போது, குழந்தை இசையில் அமைதியடைந்து, தாலாட்டைக் கேட்டுக் கொண்டிருக்கும். பின், மெல்ல மெல்ல அறிதுயில் நிலையில் பாடலைக் கேட்டுக்கொண்டே ஆழ்துயில் கொள்கிறது. மொழியையோ பாடலின் உட்பொருளையோ அந்தக் குழந்தை உணர்ந்துகொள்ள மாட்டாது. ஆனால், திரும்பத் திரும்பப் பாடப்படும் போது, பாடலின் உட்பொருள் குழந்தையின் அடிமனதில் விளங்காநிலையில். பதிந்துவிடுகிறது. அன்றே தமிழர் இதையுணர்ந்து குழந்தையின் வாழ்வில் தாலாட்டை ஒரு கலையாக வளர்த்தனர். இன்று ஐரோப்பாவில் அறிவியல் இதை உறுதிப்படுத்துகின்றது.

தாலாட்டில் மட்டுமல்ல பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பதிலும் காரணத்தையொட்டிய அறிவைப் பெற்றிருந்தார்கள். அதனால் ஓர் குறிக்கோளை ஒட்டியே பெயர் சூட்டினார்கள். பெயர் சூட்டப்பட்ட நாளில் இருந்து, பெற்றோரும் மற்றோரும் தினமும் சொல்லச் சொல்ல, அப்பெயர் அந்தப் பிள்ளையிடத்திலே அப்பெயர்ப் பண்பின் ஆளுமையை உருவாக்குகின்றது. இந்த அறிவியல் ஞானத்துடன் தான், பண்டைத் தமிழன் பெயர் வைத்திருக்கிறான். அதனாலேயே அந்நாளில் நம் மூதாதையர், ஆண்மையிற் சிறந்தவர்களாய்– ஆற்றல் மிக்கோராய்– அருங்குணங்களைக் கொண்டோராய் இருந்தார்கள். ஆரியம் தமிழனை மூடியபின், தமிழன் முற்றாகத் தாழ்ந்து போனபோது, அவன் தன் பெயரைத் தாழ்மையாகவே வைத்துக்கொண்டான். உதாரணமாக கறுப்பன், சின்னான், மாயாண்டி, பிச்சை, சின்னையர், அப்புக்குட்டி இப்படி ஏராளம். நீங்கள் அறிவீர்கள். நக்கீரன், மாறன், செழியன், இளங்கோ, என்று, 2000களின் முன் பெயர் சூட்டிய தமிழினம் இந்த நிலைக்குத் தாழ்ந்தது. இப்படித் தாழ்நிலையை உணர்த்தும் பெயர்களை அவர்கள் கொண்டிருந்ததால், உளவியல் சார்ந்து அவர்கள் விழிப்புணர்ச்சியை அடையவில்லை. தமிழீழத்தைப் பொறுத்தவரையில் ஆரியம் முற்றாக மூடாவிட்டாலும், ஆரியத்தின் வேதவீச்சு நுழைந்து, சாதியை உருவாக்கியது. இதில் தாழ்ந்துபோன மக்கள் கடந்த தலைமுறை வரை, சாதியின் பெயரால் மிகமிகப் பின்தங்கிப் போனார்கள். அதற்கு ஒரு தகுந்த காரணம், அவர்கள் தாழ்விலிருந்து மீளும்

உணர்வோட்டமுள்ள பெயர்களைக் கொண்டிருக்கவில்லை. அழைக்கப்படும்போதே இயல்பாகவே தங்களைத் தாழ்த்திக் கொள்கிற பெயர்களை வைத்துக் கொண்டார்கள். உதாரணமாக சின்னவன், குண்டுமணி, சீனியன், முருகண்டி, சின்னப்பெடியன் என்று. இந்தப் பெயர்களை உச்சரிக்கும் போதே பெயருக்குரியவர் தாழ்வுணர்வைத் தானறியாமல் பெறுகிறார். இன்று ஏறக்குறைய 30 வருடத்துள் குமுகாய மட்டத்தில் நடுமையான பெயர்களை வைத்துக கொண்டார்கள். கரிகாலன், இராசேந்திரன், மாறன், எழிலன், போன்ற பெயர்களை வைத்துக்கொண்டபோது, அப்பெயர் அழைக்கப்படுகிறபோது, அதிலொரு புத்துணர்வு உளநிலையைப் பெறுகிறார்கள். இன்று சாதியமைப்புத் தகர்ந்து மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கு பெயர் வைப்பு முறை பெரிதும் உதவியிருக்கிறது.

இன்று வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் பெயர் வைக்கிறார்களே தங்கள் குழந்தைகளுக்கு, டெனிஸ்ராஷ், டெனீஷா, நிரோஷன், கூலக்னா, சுவானி, றஞ்சா, சிந்துகா என்று ஓர் வித்தியாசமான ஓசை, நாகரீகம் என்று எண்ணுகிறார்கள். பரிதாபத்திற் குரியவர்கள். இப்பெயர்கள் இயற்கையின் விருப்பப்படி மனோவியல் அடிப்படையில் ஆளுமையை ஏற்படுத்தமாட்டா. அதனால் குழந்தைகள் மனித இனப் பண்புக்கு வெளியே, அறிவியற் சூழலில் இயந்திர மனிதனாக மாறி, முழு மானிட வாழ்வை அடையமுடியாமற் போகிறார்கள், என்பதை உணராமல் உள்ளார்கள்.

தாலாட்டும் பெயரும் ஒரு மனிதனின் வாழ்வை ஒழுங்கு படுத்துகின்றன என்பதை அன்னையர் புரிந்துகொண்டு தங்கள் பிள்ளை வளர்ப்பினை ஒழுங்குபடுத்துவது சிறந்தது.

## சில தாலாட்டு வரிகள்

தேரோடும் வீதியெல்லாம் எங்கடை தம்பி தானோட
வல்லவரோ!
முத்தான முத்தல்லவோ முதுகடலின் ஆணிமுத்தோ!
ராசாதி ராசன் எங்கள் ராசாவே கண்ணுறங்கு!
கட்டிக்கரும்பே கட்டழகே கண்ணுறங்கு!

மொழியறியா அக்குழந்தை இப்படியாகத் தன்னைப்பற்றி ஏதோ உயர்வான மொழிகளை உள்வாங்கிக்கொண்டே உறங்குகிறது. மொழியறியும்போது அதனது அடிமனதின் உணர்வுகளில், தாலாட்டின் பொதிவுகள் தோன்றுவதால், அத்தன்மைகளில் இருந்து மாறா நிலையில் உருவாகுகின்றது. இந்த நாட்களில் தான் பார்க்கிறோமே தாய் தாலாட்டுப் பாடமாட்டாள். உர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர் உம்ம்ம்ம்என்று ஏதோ காக்கா குருவி கத்துவதைப் போலச் சத்தம் போட்டு தூங்க வைக்கிறார்கள். இந்த விலங்கொலியால் குழந்தையின் அடிமனதில் பதிவுகள் வெற்றிடமாகப் பதிவாகின்றன.. அக்குழந்தை காட்சிக் கருத்தறிவை, மொழியறிவை உள்வாங்குகிறபோது, தெரிவாற்றலின்றி அப்படியே

உள்வாங்கிக் கொள்ளுகின்றது. அதனால் பண்பாட்டியல் உருவாக்கம் பின் தள்ளப்படுகிறது. அல்லது சிரமப்பட்டு ஊட்டப்பட வேண்டும். எனவே வீரமுள்ள பாடல்கள், பகுத்தறிவுள்ள பாடல்கள் தாலாட்டாகப் பாடப்பட வேண்டும் எனப் பாடிக் காட்டினான் கனக-சுப்பரத்தினம்.

## ஆண்குழந்தைத் தாலாட்டில் சில வரிகள்

ஆசை தவிர்க்க வந்த ஆணழகே! சித்திரமே!
பிள்ளையாய் வந்து பிறந்த பெரும் பேறே!
நீதி தெரியும் என்பார் நீள்கரத்தில் வாளேந்தி
சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில்
கனலேற்ற வந்த களிறே!--கண்ணுறங்கு
அள்ளும் வறுமை அகற்றாமல் அம்புவிக்குக்
கொள்ளை நோய் போல் மதத்தைக் கட்டியழும்வைதீகத்தை
போராடிப் போராடிப் பூக்காமல் காய்க்காமல்
வேரோடு பேர்க்க வந்த வீரா! இளவீரா!--கண்ணுறங்கு
மூடப்பழக்கத்தைத் தீதென்றால் முட்டவரும்
மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்ட வந்த
ஈடற்ற தோழா இனந்தோழா!--கண்ணுறங்கு
காப்பார் கடவுள் உமைக் கட்டையிலே போகுமட்டும்
வேர்ப்பீர் உழைப்பீர் எனவுரைக்கும் வீணருக்கு
மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே! என் செந்தமிழே கண்ணுக்கு

## பெண்குழந்தைத் தாலாட்டு

வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே!
மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!
வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்கு
தூண்டா விளக்காய் துலங்கும் பெருமாட்டி!
புண்ணிற் சரம்விடுக்கும் பொய் மதத்தின் கூட்டத்தை
கண்ணில் கனல் சிந்திக் கட்டழிக்க வந்தவளே!தெய்வீகத்தை நம்பும் திருந்தாத பெண்குலத்தை உய்விக்க வந்த உவப்பே! பகுத்தறிவே! வாயிலிட்டுத் தொப்பை வளர்க்கும் சதிக் கிடங்கை
கோயிலென்று காசு தரும் கொள்கை தவிர்ப்பவளே!
சாணிக்குப் பொட்டிட்டு சாமியென்பார் செய்கைக்கு
நாணியுறங்கு நகைத்துக் கண்ணுறங்கு

சுப்புரத்தினமும் அவன் வழிவந்த பல பாவலர்களும், இப்படியான இனிய தாலாட்டுப் பாடல்களைப் பாடித் தந்து, இளைய - புதிய விழிப்புள்ள தலைமுறையை உருவாக்க உதவினார்கள்.

அன்னையரே! நல்ல தமிழ் எண்ணமும், தமிழராய் நற்பண்பும் உயர்திறன்களும் கொண்டவர்களாக உங்கள் குழந்தைகள் வளரவேண்டுமானாற் குழந்தைகளைத் தாலாட்டால் மகிழ வைப்பதோடு, இனிய தமிழ்ப் பெயர்களை அவர்களுக்குச் சூட்டுங்கள், என்று கமலம் உங்களிடம் மன்றாடுகிறது.

என் இனிய தமிழன்பர்களே! உங்கள் கைகளில் கமழும் கமலம், தமிழையும் தமிழினத்தையும், தூய்மைப்படுத்தி, மறைக்கப்பட்ட தமிழ் மாண்புகளை வெளிக்கொணர்வதைத் தன் பணியாய்க் கொண்டது. இந்த நற்பணி சிறக்க ஆண்டறநிதியாக (4மலர்கள்) 20 டி. எம். கொடுத்து உதவுங்கள். தங்கள் ஆதரவிற்கு நன்றி

பணிவன்புடன் அழலாடி

கமலத்தின் சிறுகதை

## தெளிவு

எதுக்கெண்டு மண்டையைப் போட்டு உடைக்கிறது எந்தப் பக்கத்தாலை பார்த்தாலும், எல்லாம் கலக்கமாயும் - கவலைகளாயும், தெய்வமே! நிம்மதியில்லாமல் நீண்டதொரு பெருமூச்சுவிட்டார் கந்தசாமி.

பிள்ளைகளும் நித்திரையாய்ப் போச்சுதுகள், வருவார் வருவார் என்று காத்துக்கொண்டிருந்த சரசு என்னடா ஆள் அசைவதாகக் காணவில்லை. மணிபத்தாகிவிட்டது என்னவாக்கும் என்று யோசித்து, என்னப்பா! இஞ்சேருங்கோ! சாப்பாடு சுடவைக்கட்டோ, என்று கேட்டபடி வந்தாள். இது கந்தசாமியின் கவனத்தை இழுத்திருக்க வேண்டும். அவர் பதிலுக்கு மீண்டும் ஒரு பெருமூச்சை விட்டார். கணவனின் பெருமூச்சை அவதானித்துவிட்ட சரசு.

என்ன பெருமூச்சு விடுறியள். அப்படியென்ன நெருக்கடி வந்திட்டுது இப்ப உங்களுக்கு. இதைக் கேட்டதும் மனவுளைச்சலில் இருந்த கந்தசாமிக்குப் பத்திக்கொண்டு வந்தது ஆத்திரம்.

உனக்கென்ன தெரியும் என் மண்டைபடும் பாட்டை. எப்பபார்த்தாலும் சாப்பாடும் படம் பார்ப்பும்- மனுசன் படுகிற பாட்டுக்கை நீ வேறை.. எரிந்துவிழுந்தார். சரசுவும் பாவம் உலகம் உருண்டாலும் சரி. நின்றாலும் சரி கவலைப்படவே மாட்டாள். ஐ.பி.சி யிலை, தமிழ்ப் பேப்பர்களிலையெல்லாம் வருகிற செய்திகள்: வன்னியிலை சிங்களவன் குண்டுபோட்டு 40பேர் மரணம், 95 பேர் படுகாயம், செம்மணி உப்பளத்திலை எங்கடை காணாமற்போன தமிழ்ப்பிள்ளைகள் பிணங்களாய்ப் புதைந்து கிடக்குதுகளாம். இந்தச் செய்திகள் அவளுடைய காதிலோ கண்ணிலோ சுரண்டியதே

இல்லை. பிள்ளைகள், இந்தச் சாப்பாடு, அந்தச்சாப்பாடு, டொச் புத்தககங்களில் வருகிற விளம்பரங்களில் கண்ட சாமான்கள். அன்ங்கபோட் (மலிவுவிற்பனை)போட்டால் தேவையோ தேவையில்லையோ வாங்கிக் குவிக்கிறது. புதுப்புது ஆடைகள். அண்டைக்கு பாலாவின்ரை பிள்ளையின் பிறந்தநாள் விழாவிற்குப் போட்ட சட்டை இண்டைக்குக் கலியாணவீட்டுக்குப் போடக்கூடாது. இண்டைக்குப் போட்டசட்டை, வாறகிழமை மங்களம் வீட்டுச் சாமத்திய வீட்டுக்குப் போடக்கூடாது. வீடுகளிலை என்றாலும் பரவாயில்லை, கோல் எடுத்துச் செய்யினம். வீடியோப்படமும் எடுப்பினம். அதுகள் வாழவேண்டிய வயதிலை வாழவேண்டும் நாளைக்கு எங்களைவிட்டுப் போனபிறகு அதுககளின்ரை வாழ்வு எப்படி அமையுமோ, இந்த வட்டத்திற்குள் சுழல்வாள்.

இலங்கையில் இருந்தகாலத்தில் இப்படி எண்ணமுடியுமா? எண்ணமுடிந்தாலும் இந்தமாதிரி நடக்கமுடியுமா என்று சரசு எண்ணிப் பார்த்ததே இல்லை. சரசு என்ன? வெளிநாடுவந்த எங்கடைதமிழ்ப் பெண்டுகள் அதிகம் இப்படித்தான் வாழ்கிறார்கள்.

கந்தசாமியின் கவலைகள் ஆழமானவை. எதிர்காலம் பற்றியவை. அவ்பென்ஃகால்ற்(தங்குரிமை) கிடைத்துவிட்டது, இனியென்ன? கடைசிவரை சேர்மன் தானே என்று, முதலும்சரி, பிறகும் சரி பிள்ளைகளுக்குத் தமிழ் படிப்பிக்கவில்லை. தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தொடங்கிய பின்னரும், அதுகள் டொச்சைப் படிக்கட்டும் என்று இருந்தார். பிள்ளைகளும் வீட்டில் டொச்தான் பேசுவார்கள். அதைக்கேட்பதில்க் கந்தசாமிக்குப் பெரிய ஆனந்தம். கந்தசாமி கொஞ்சம் படித்தவர். நண்பர்கள் யாராவது பிள்ளைகள் தமிழ் படிக்காததைப் பற்றிக் கேட்டால் புத்திசாலித் தனமாகப் பதில் சொல்லிக் கொண்டு, தன்பிள்ளைகள் தான் சேர்மனியிலேயே கெட்டிக்காரர்கள் என்றொரு நினைப்பு. இன்றைக்கு என்னடா என்றால் தமிழரைத் திருப்பி அனுப்பப் போறாங்களாம்.. எசுப் பி டி வந்தால் அகதிகளுக்கு நல்லது என்றெல்லாம் கதைச்சாங்கள். அவங்கள்தான் அனுப்பிறதுக்கு மோசமாக நிற்கிறாங்களாம். அதுக்குள்ளை இங்கையிருக்கிற தமிழ் எழுத்தாளர்கள் என்கிற விசரன்கள். இலங்கையிலை கடுமையான அரசபயங்கரவாதம் நடக்குது. தயவுசெய்து திருப்பி அனுப்புவேண்டாம். இங்கே வாழ்விட அனுமதி கிடைத்தவர்கள் அதிகம் பேர் இலங்கைக்கு ஊருலாப் போய் வருகினம் ஆனபடியால் அங்கே தமிழருக்கு பிரச்சினை இல்லை என்று சொல்லி அரசு தமிழரை அனுப்ப முயல்வது கொடுமை .அப்படி அனுப்பிறதென்றால். இலங்கைக்குப் போய் வநனுப்பாதையுங்கோ என்று எழுதுறாங்கள் தமிழிலை எழுதினால் என்ன ? அரசாங்கத்திற்குப் போகாத? போகும்தானே. இவள் சரசுவின்ரை ஆக்கினையால் ஒன்றுக்கு இரண்டு தடவை போய் வந்திட்டம். அப்ப ஒரு பெடியன் சொன்னவன். அண்ணை! இப்படி இலங்கைக்குப் போய்வாறது மற்றத் தமிழரைக் காட்டிக் கொடுக்கிறமாதிரித் துரோகம் என்று. நான் கேட்கவில்லை. கெடுகுடி சொற்கேளாது என்கிறது சரிதான்

இப்ப அங்கைபோய் பிள்ளைகளுக்குத் தமிழ் படிப்பிக்கவில்லை என்றதும் ஒரு குற்றவாளி மாதிரிக் கணிப்பார்களே, மடைவேலை பார்த்திட்டன். முனம் குழம்பினார் கந்தசாமி. எண்ணங்களைத் திசைதிருப்பமுயன்றார். மனமா விடும், அது வேறொரு பக்கத்தாலை ஓடியது. பெட்டைக்கும் வயது வந்திட்டுது. கிடக்கிற காசை வைத்துக்கொண்டு பயந்து சாகிறதிலையும், சோசலிலை(நாட்டின் பணத்தில் நாட்டிற்குப் பாரமாக) இருக்கிறவை காசு வைத்திருக்கேலாதாம் என்றபடியும் இருந்தார். விடுதலைப்

போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்யாதவை நாட்டுக்கும் காசு கொண்டு போறதும் ஆபத்தாம் என்று கதை. மாதாமாதம் ஒரு பத்து டி எம் விடுதலைக்குக் கொடுத்திருக்கலாம். நான் கொடுத்தாலும் அவள் சரசு விடமாட்டாள். இப்ப கிடக்கிற காசைக் கொண்டு ஒரு பொடியனைப் பார்த்துச் செய்துவைப்பம் என்றால், ஆரைப் பார்த்தாலும் தண்ணிபோடுவாங்கள் போலுள்ளது. தேடிப்பிடிக்க முடியவில்லை ரிவீக்காரன் வேறு, பகல் இரவு என்று பாராமல் அப்படி இப்படி ஒருமாதிரியான படங்களைப் போடுறான். ஆதுகளைப் பார்க்க வயது வந்த பிள்ளைகளுக்கு, ஒரு மாதிரி வரும்தானே. நானென்ன தாவணிக் கனவிலை பாக்கியராசா மாதிரி காசு மாற்றி வைத்துக்கொண்டிருக்கட்டே. போதாக்குறைக்கு நகரெல்லாம் வெளிநாட்டுச்சனம். அதுகளின்ரை நடைமுறையும் அவ்வளவு சரியில்லை. ஆரென்ன சொன்னாலும் டொச்லாண்டுக்கு வெளிநாட்டுச் சனம் இடைஞ்சல் தான். பெட்டையின்ரை கல்யாண எண்ணமும் முடிவில்லாமற் குழம்பிக்கொண்டிருந்தது.

சேர்மனியில் கிறித்தவன் என்று சொன்னால் கொஞ்சம் அணைவு கிடைக்கும் என்று நினைச்சு, விசர்த்தனமாய் மதமும் மாறிட்டன். மாறினது தான் மிச்சம் நினைச்சமாதிரி ஒன்றும் இல்லை. போதாக்குறைக்கு இலங்கைக்குப் போய் என்ன செய்யிறது என்ற என்ரை கவலைக்கை, சபைக்காரர், கந்தசாமி நீங்கள் இலங்கைக்குப் போனால், போனதும் எங்கடை சபையை சாட்சியாய் இருந்து வளர்க்க வேண்டும் என்று வேண்டுகோள். பாவம் கந்தசாமி பொருளியல் நலன் கருதி மதம் மாறின விடயம், சபைக்காரர்களுக்கு எங்கே தெரியப்போகிறது. அவர்களுடைய எண்ணமெல்லாம், மனுசன் சீவிக்கிற தேவனை நம்பி மதம் மாறினார் என்பது தான். அவரும் இலங்கையில் இருந்தபோது சமயபேதம் அற்றவர். எல்லாச் சமயங்களும் ஒன்றுதான். வெள்ளைக் கடற்கரை,மடுமாதா, பாலைதீவு, பாசையூர் அந்தோனியார் கோவில் எல்லாத் தலங்களுக்கும் போனவர் தான்: ஆனால் அவர் மதம் மாறவில்லைச் சைவனாகத்தான் இருந்தார். இப்ப எல்லாம் வெளிநாடு செய்தவேலை. நல்லகாலம் பெயரை மாற்றாமல் இருந்தேனே. மனதிற்குள் மகிழ்ந்தார் கந்தசாமியாய் இருந்தமைக்கு.

சரசுவிற்குப் புரிந்துவிட்டது கணவன் ஏதோ கடுமையாய்க் குழம்புகிறார் என்று. மெதுவாகப் பக்கத்தில் வந்தமர்ந்தாள். என்ன களைத்துப் போயிருக்கிறியள் ஏதும் சுகமில்லையே. இதமாகத் தொட்டுப் பார்த்தாள். அந்த இதத்தில் கந்தசாமியின் மனச்சூடு குறைந்தது. எல்லாம் பிரச்சினையாய்க் கிடக்கப்பா, என்று தன் மனத்துன்பங்களைச் சொன்னார்.

ஓ! இவ்வளவு பிரச்சனைகளா! நான் எண்ணிப் பார்த்ததே இல்லை. அவர் ஆண்பிள்ளை எதுக்கெண்டுதான் கவலைப்படுகிறது என்று ஆதங்கப்பட்ட சரசு, இஞ்சேருங்கோ நான் ஒன்று சொல்லுறன் எல்லாப் பிரச்சனையும் தீர்ந்திடும், கோவிக்காமற் கேளுங்கோ. சொல்---பேசாமல் கனடாவுக்குப் போவோம்.--இதைக் கேட்டதும் கந்தசாமி எரிமலையானார். ஓமோம் நீயடி! இந்தளவிலை விடாமல் என்னை உள்ளுக்குத் தள்ளுற எண்ணமும் வைச்சிருக்கிறாய் என்ன?

சரசு பயந்து போனாள்--நான் என்ன இப்ப தப்பாய்ச் சொல்லிப் போட்டன். பின்னையென்ன பெண்சாதி சுதந்திரத்துக்குப் போராடுவாள் கணவனுக்கு யோசனை சொல்லக்கூடிய மந்திரியாய் இருக்கமாட்டாள். இருந்தால் தானே சொல்லுறதுக்கும். உங்களுக் கெல்லாம் சுதந்திரம் வேணும். போங்கோ! போய் போராடுங்கோ. பிள்ளைகளுக்கு இத்தனை வருசமாய் தமிழ் படிப்பிக்க எண்ணவில்லை. அதுகள் டொச் மட்டும் தான்

பேசுதுகள். எயர்போர்ட்டிலை போய் நிற்க, அதுகள் டொச்சிலை கதைக்க, கரைச்சல் இல்லாமல் பொலிசுக்காரன் என்னைப் பிடித்து உள்ளுக்குத் தள்ள வசதியாயிருக்கும்.. பிறகு சோசல்காரன் சாப்பிடத் தானே காசு தந்தனாங்கள் 15 ஆயிரம் டி எம் எங்காலை என்று பிரச்சினைக்கு வர, நல்ல யோசனை. கந்தசாமி தான் செய்த தவறுகளையும் சரசுவின் தலையில் சேர்த்துப் போட்டு ஆத்திரத்தில் குமுறினார்.

விசராக்கிப்போடும் போல் மண்டைக்குள் ஒரே குடைச்சல். ஏன் இந்தத் துன்பம். எதனால் வந்தது. கொஞ்சம் தனக்குள் திரும்பிப் பார்த்தார். நானும் படிச்சவன் தான், இருந்தும் என்ன பயன். இன்று வரை படித்தவன் மாதிரிச் சிந்திக்கவில்லை. நடக்கவில்லை. படித்தவனாய் நடந்திருந்தால் இந்த மனக்குழப்பம் இன்று வந்திராது. பணம்–பணம் என்று அவாப்பட்டு அலைந்தது தான் செய்தவேலை எவ்வளவு அறியாமை. இலங்கையிலை எங்கடை சனமும் அந்தப் பெடியளும் நாட்டுக்காகச் செத்துக்கொண்டிருக்க, நான் இங்கை பெண்டில் பிள்ளைகளைப் பட்டாலும் பவுணாலும் மூடி அழகு பார்த்துக்கொண்டு, அதை மறந்திருந்தனே சீ நான் எவ்வளவு கேவலமான மனிதன். யோசித்து, யோசித்து மனக்குழப்பங்கள் தீர்ந்தவராக, கந்தசாமி முடிவில் நினைத்தார், இதெல்லாம் சிவத்துரோகத்தால் வந்தவினை.

இனியும் இப்படி வாழக்கூடாது . நேரத்தைப் பார்த்தார். இரவு 10.30 பிந்தித்தான் போச்சு வெள்ளிக்கிழமை என்றபடியால் பரவாயில்லை. தொலைபேசி எண்களைச் சுழற்றினார். மறுமுனையிற் தொடர்பு கிடைத்தது. ரீ ஆர் ஓ சீலன் இருக்கிறாரோ? மறுமுனையிற் சீலன்தான் இருந்தார். தம்பி நான் கந்தசாமி நாளைக்குகொருக்கால் வீட்டை வந்திட்டுப் போங்கோ, புனர்வாழ்விற்கு ஆயிரம் டி எம் தாறன். அப்படியே விடுதலைப் போராட்டத்திற்கு நிதிசேர்க்கிற தம்பியையும் ஒருக்கால் வரச்சொல்லுங்கோ. மாதாமாதம் எங்களாலை முடிஞ்சதை நாட்டுக்காக் கொடுக்காட்டி நாங்கள் என்ன மனிசர் தம்பி. சரி தம்பி வணக்கம்!

கந்தசாமியை அறியாமலே அவருடைய வாயில் வணக்கம் புகுந்திருந்தது.

நீண்ட பெருமூச்சொன்று விட்டார். களைப்பினால் அல்ல, மண்டையிடியினால் அல்ல, தலைக்குள் இலேசாக, மனசு பாரமற்று, உடல் முழுவதும் ஒரு சுகமாக இருந்ததனால். இறைவனை நினைத்தார் கந்தசாமி. இறைவா! எக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும் அக்கோலத் தவ்வுருவேயாம்.

இறைவா! பல நாமங்களால் உணரப்பட்டாலும், ஏகன் அனேகனாகி நிற்கும் பரம்பொருளே! எனக்குத் தெளிவைத் தந்தமைக்கு நன்றி. என்னப்பா சரசு! சாப்பிடுவம். சாப்பிட எழுந்தார் கந்தசாமி

யாவும் கற்பனை---

# இராவணன்

குமரிக் கண்டம் அழிகின்ற வரை உலகம் ஒரே நிலத் துண்டாக இருந்தது. குமரிக்கண்டம் அழிந்தபோதுதான் ஆத்திரேலிய, ஆப்பிரிக்க, ஆசிய, அமெரிக்கக் கண்டங்கள் தோன்றின. இதனால் ஆதி மனிதனான தமிழன், பிரிந்த நிலத்துண்டோடு

போய், அது நிலைகொண்ட நிலப்பகுதிக்கேற்ற சூழலுடன் தன் வாழ்க்கைக் கோலங்களை மாற்றிக்கொண்டான். இதைக் கிறீத்தவ வேதாகமத்தின் பழைய ஏற்பாடு, வேறு விதமாகக் கூறுசிறது. சுமேரிய ஊர் என்னும் இடத்ததைவிட்டு, ஆப்பிரகாம் தலைமையில் பிரிந்துசென்றவர்கள் பாரசீகப் பெருநிலத்தில் தங்களுக்கு என ஒரு நகரத்தை அமைக்க முற்பட்டார்கள். அப்போது, கர்த்தரானவர், மனிதர்கள் தன்னை மறந்துவிட்டுத் தாங்கள் தங்களைப் பெரிதாக எண்ணுகிறார்கள். ஆகையினால் இவர்களைப் பிரிப்பேன். ஒருவர் பேசுகிற பாசை மற்றவர்களுக்கு விளங்காதபடி செய்வோம் என்றார். அவ்விதமே ஆயிற்று. இந்தச் சம்பவம் தான் ஒரேபாசை பேசியவர்கள் பல பாசைக்காரரான குமரிக்கண்ட அழிவின் சம்பவம். இந்த வேளையில் தான் கடலாயிருந்த நிலப்பரப்பில் இமயம் தோன்றியது. கர்த்தர் உலகையளித்தபோது அவரின் ஒப்புதலின்படி நோவா பேழையுள்ளும், தானும் தன் ஆட்களும் விலங்குகளுடனும், பிரளயத்தில் தப்பிச் சென்று பாரசீகத்தில் பரவியதாக பைபிள் கூறுவதும் இந்தக் குமரிக் கண்ட அழிவின் செய்தி தான். இப்படி அழிந்து மீந்த நிலப்பரப்புக்களில் வாழ்ந்த மக்களை ஆண்ட மன்னர்களில் மிகப்பெரும் புகழ் படைத்த மன்னன் தான் இராவணன். குமரிக்கண்ட அழிவின்போது, உடைந்து சிதறியும் அமிழ்ந்து போகாமல் இருந்த குமரியின் மனிதத் தோற்றத்திற்கே இடமாயிருந்து, ஆதி மனிதனின் துகள் படிந்த மண்ணாக இன்று வரை நிலைத்து இருக்கின்ற இலங்கையில், தன் தலை நகரத்தைக்கொண்டிருந்தான். இவன் இலங்கேசுவரன் என்று போற்றப்பட்டான். ஈசுவரன் என்பது இறைவனை. இராவணன் இறைநிலையில் வைத்து மக்களால் போற்றப்பட்ட மன்னன்

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்.– – – –குறள்

முறைதவறாது, செங்கோலாட்சி செய்து, தன்னால் தன்னைச்சேர்ந்தவர்களால், கள்வர்களால், பகைவர்களால், உயிர்களால் ஆனபயம் ஐந்தும் தீர்ப்பது மன்னன் கடமை. அப்படி நாடும் மக்களும் சிறப்புற ஆண்டவன் இராவணன். இராவணன் இலங்கையில் இருந்துகொண்டு, சகல கண்டங்களையும் ஆண்டான். அதைத்தான் வான்மீகி 'கோள் ஒத்த சிறை வைத்தாண்ட கொற்றவன்' என்று பாடினானினிய தமிழனைத் தாழ்த்தப்பாடிய பாடலிலேயே இப்படிப் பாடினான் என்றால் அவனது பெருமை தான் என்ன? ஒன்பது கோள்களையும் ஆண்டான் என்பது வான்மீகியின் கூற்று. அவனுடைய தங்கையினுடைய பெயர் காமவல்லி, ஆனால் இராமாயணம் அவளைப் பழிக்கும் நோக்குடன் முறப்பல்லி என்றபொருள்பட சூர்ப்பநகை என்று கூறுகிறது. எந்த நோக்கத்தில் வான்மீகி அப்படிப் பெயரை வைத்திருந்தாலும்,. அந்தப் பெயர் அவளுக்குப் பொருத்தமானதே. சூர்ப்பு என்றால் வீரம். நகை என்றால் சிரிப்பு. வீரச்சிரிப்புடையாள் என்பது பொருள். இந்திய உபகண்டத்திலே நனத்தானம் என்கிற இடத்திலே படைத்தளமும், ஆளகமும் (ஆட்சிப்பணிமனை) அமைத்து, இராவணனின் இராசப் பிரதிநிதியாக இந்தியாவை ஆட்சிப்படுத்தியவள் இராவணனின் தங்கை சூர்ப்பநகை தான். சமகாலத்தில் இந்துநதிப்படுகையில் உள்ள நாடுகளை அதாவது வடஇந்தியாவை இலவணன் என்னும் தமிழன் ஆண்டான். பெயர் ஒற்றுமையைக் கொண்டு நோக்கும் போது இவன் இராவணனின் உறவினன் என்று தெரிகின்றது.

இராவணன் மாவீரன். வாரணம் பொருத மார்பும் – யானைகளுடன்

சண்டையிட்டு வென்ற மார்பும், வரையினை எடுத்த தோளும் – (மலை இடையூறாக இருந்தமைக்காக மலையைப் புரட்டினானாம்) இது உயர்வுநவிற்சி எனினும், அவனுடைய வெந்திறலைக் காட்டுகிறது. , நாரத முனிவற்கேற்ப நயம்பட உரைத்த நாவும் – (இந்திர சபையிலே யாரும் வெல்லமுடியாத வீணை வல்லவர் நாரதர். நாரதர் மனிதரல்லத் தேவர்) நாரத முனிவரிற்கு நிகராக வீணைமீட்டி இறைவன்மீது இசைபாடிய நாவும் உடையவன் இராவணன். இராமாயணத்தில் தமிழனைக் குரங்கென்றும் அரக்கனென்றும் தாழ்த்திப் பாடிய வான்மீகியே இத்தனையையும் பாடியுள்ளான். வீரமும், கல்வியும் செல்வமும், நீதியும் நிறைந்து, இராவணனும் இலங்கையும் உலகப் புகழ்கொண்டு நிற்பதைப் பொறுக்கமுடியாத நாவலந்தீவுத் தமிழர்கள், கைபர் கணவாய் ஊடாக, மாடுமேய்த்துக் கொண்டு நாவலந்தீவுக்குள் (இந்தியா) நுழைந்த, ஆரியர்களுடன் சேர்ந்துகொண்டு, இராவணனையும் அவனது சுற்றத்தையும் காட்டிக்கொடுத்தார்கள். போரறம் மீறியும் சூழ்ச்சிகளினாலும் போரறம் தவறாது நீதிவழி நின்ற இராவணனை வெல்வது ஆரியர்க்கு இலகுவாயிற்று. அவனுடைய தம்பி விபீடணன் என்பவன்கூட, ஆட்சியுரிமைக்காக ஆரியரிடம் தமையனைக் காட்டிக் கொடுத்தான்.

இந்த இராவணனுடைய காலத்திலே, ஈழம் எத்தகை உயர் நிலையில் இருந்தது என்பதைக் காண்போம். அதன் முன்– உலகில் முதல் மனிதனும்– மனித நாகரீகமும் தோன்றிய இடம்– குமரிக்கண்டம் என்கிற இலெமூரியா என்பதையும்– இராமாயண காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே– குமரிக்கண்டம் தொடங்கி சுமேரியாவரை– இந்த இலெமூரிய மனிதன் வாழ்ந்த அடையாளங்கள் உண்டென்பதையும்– அந்த இனம் தமிழினம் என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

எனவே, ஆதி மனிதத் தோற்றம் தொடங்கி, உலகிற்குக் கிடைத்திருக்கும் வரலாற்றின் முதல் நாள் வரை, தமிழினம் இந்திய உபகண்டத்தில் வாழ்ந்தது. இன்றும் வாழ்கிறது. ஆனால் இடைப்பட்ட இராமாயணக் கதைக் காலத்தில், இந்தியாவிலும் இலங்கையிலும் குரங்குகளும், அரக்கர்களும் வாழ்ந்தார்கள் என்று வான்மீகி பாடியுள்ளான். இராமாயணக் கதாநாயகன் இராமனை உயர்த்த, மாவீர இராவணனை மறைக்க, இந்தியத் தமிழர்களிடம் இராமன் உதவி பெற்றதை மறைக்க, இப்படிப் பாடினான் வான்மீகி. இதையேன் இங்கு கூறுகிறேன் என்றால், அப்படித் தமிழனைத் தாழ்த்தி, இழித்துப் பாடிய வான்மீகி, இராவணனுடைய ஆட்சியின் போது இலங்கையின் சிறப்பைப் பற்றி, இல்லாததைப் புனைந்தோ புகழ்ந்தோ கூறியிருக்கமாட்டான். எனவே, இராமாயணம் காட்டும் இலங்கை உண்மையாகவே அச்சிறப்பினை உடையதாக இருந்தது.

சீதையைத் தேடி அனுமன் விண்ணுந்திலே இலங்கைகுச் சென்றான். கடலைத் தாண்டி நிலப்பரப்பினுள் நுழைந்தபோது, அவன் முன்னெப்போதும் கண்டிராத அழகிய நகரத்தைக் காண்கிறான்.

ஆகாயத்திலே மேகங்கள் பலவிதமான தன்மைகளுடன் கருத்து, வெளுத்து உருண்டு திரண்டு நகர்ந்துகொண்டிருக்கின்றன. இம் மேகங்களிடையே நீரணுக்களைச் சுமந்து, கருத்தாங்கி, எந்நேரமும் பொழிந்து தள்ளத் துடித்துக் கொண்டிருக்கிற கார்மேகங்கள்

கனதி காரணமாக காற்றிடையே அழுத்தத்தை ஏற்படுத்திக் கொண்டற் காற்றுடன் கலக்கின்றன. இவற்றுக்கு மேலே ஆகாய விளிம்பிலே நீரணுக்களைக் கொண்டிராத, கருமையற்று விரிந்து கிடக்கிற வெண்முகிற் கூட்டமானது மிதந்து செல்கிறது. இந்த வெண்முகிற் கூட்டங்களுக்கு இடையே, மறைந்து மறைந்து தெரிகிற, ஓடம் நீந்துவது போல் காட்சியளிக்கின்ற, சந்திரனை முட்டுகின்றதோ என்று ஐயுறும்படி கட்புலனைக் கடந்து நிற்கிற, உயரமான மாளிகைகளை உடையதாக அந்த நகரம் இருந்தது. அம்மாளிகைகளின் சுவர்களிலிருந்து புறப்படுகிற ஒளியானது, கண்ணைப் பறிக்கிறது. மாளிகைகளின் சுவர்கள் பொன்னைக் கொண்டு கட்டப்பட்டதாகவும் அழகிற்காக இடைஇடையே ஒன்பான் மணிகள் பதிக்கப்பட்டதாகவும் இருந்தது. இவற்றிலிருந்து வெவ்வேறு வண்ணங்களையுடைய ஒளிக் கதிர்கள் தோன்றின. இவ்வொளிக்கதிர்கள் ஒன்றோடொன்று மோதித் தெறிப்படைந்து, ஓர் ஒளிக்கலவையை நிகழ்த்துகின்றன. இந்த மதிற் சுவர்கள் மின்னலைக் கொண்டு கட்டப்பட்டுள்ளதா? பன்னிறங்களைத் தன்னகத்தே கொண்ட வெயிலைக் கொண்டு கட்டப்பட்டுள்ளதா? என்று தீர்மானிக்க முடியாமல் அனுமனைத் திகைக்கவைத்த மாடிவீடுகளை உடையதாக இருந்தது இலங்கையின் நகரம் ஒன்று.

அது கம்பனுடைய நடையிலே
பொன் கொண்டிழைத்த மணியைக்கொடு புதைத்த
மின் கொண்டமைத்த வெயிலைக் கொடு சமைத்த
என் கொண்டியற்றிய எனத் தெரிகிலாத
வன் கொண்டல் விட்டு மதி முட்டுவன மாடம்.

அனுமன் அந்நகரத்தின் அழகைக் கண்டு வியப்படைந்தவனாக, அந்நகர மக்களின் வாழிடங்களிடையே சென்று பார்க்கின்றான். அந்த வாழிடங்கள் தோறும் சூழ மரங்களடர்ந்த சோலைகள். அச்சோலைகளிலே பூத்துக் – கனிந்து நிற்கின்ற மரங்களெல்லாம், தேவலோக மரமான கற்பகதருக்கள் போல் காட்சியளிக்கின்றன. வீடுகளுள்ளே காணப்படுகின்ற பொருட்கள் யாவும் பொன்னால் ஆனவையாகக் காணப்பட்டன. வீட்டுப் பாவனைப் பொருட்களைப் பொன்னால் செய்யும் அளவுக்குச் செல்வந்தர்களாக இருந்தார்கள் அந்நகர மக்கள் என்பது மட்டுமல்ல, வீட்டினுள்ளே இருக்கும் பொருட்கள் வெளியிலே தெரியும்படியாகப் வீட்டுச் சுவர்கள் பளிங்கினாலானவையாக இருந்திருக்கவேண்டும். அவ்வில்லங்களிலே பணிப்பெண்களாக இருப்போர் தேவருலகப் பெண்களைப் போன்று பேரழகிகளாக உள்ளனர். தேவருலகப் பெண்கள் தான் அரக்கரிடம் தோற்று அடிமைகளாக உள்ளனரோ எனத் தோன்றுகிறது. இக்காட்சிகள் அந்நகர மக்களின், வார்த்தைகளால் அளக்கமுடியாத வாழ்வின் உயர்ச்சியைக் காட்டுகின்றன. இந்த உயர்வு தவப்பலனல்ல, தவமே தவம் செய்து கிடைத்த பலன்போலும். கம்பருடைய நடையிலே

மரம் அடங்கலும் கற்பகம் மனையெலாம் கனகம்
அரமடந்தையர் சிலதியர் அரக்கியர்க்கு அமரர்
உரமடங்கிவந்து உழையராய் உழலுவர் ஒருவர்
தவம் அடங்குவது அன்று இது தவம் செய்த தவமால்

இந்த இல்லங்களிலே வாழ்கின்ற மக்கள் இன்பத்தின் எல்லையே இலங்கையிற் தான் என்பது போல் சுகித்து வாழ்கிறார்கள். பளிங்கினாலே கட்டப்பட்டிருப்பதால் வீட்டினுள் நடப்பவையும் அனுமன் கண்களில் படுகின்றன. அந்த இல்லங்களினுள்ளும், அவற்றைச் சூழ்ந்துள்ள, மலர்ந்து மணங்கமழ்ந்து தேன்சிந்தி நிற்கின்ற சோலைகளிடையேயும், தேவருலகப் பெண்களைப் போன்ற அழகியர் வழங்கும் மதுவை உண்டு, ஆடலும் பாடலுமாக இன்புற்று இருப்பவர்களையல்லால் கவலைப்படுபவர்களைக் காணேன். அனுமன் வியக்கிறான்.

கம்பரின் நடையிலே

பளிங்குமாளிகைத் தலந்தோறும் இடந்தோறும் பசுந்தேன்
துளிக்கும் கற்பகத் தண்ணறுஞ் சோலைகள் தோறும்
அளிக்கும், தேறல் உண்டு ஆடுநர் பாடுநராகிக்
களிக்கின்றார் அல்லால் கவல்கின்றார் ஒருவரைக் காணேன்.

ஆகாயத்தை முட்டித், தவழ்ந்துவரும் கார் மேகங்களைக் கடந்து, விண்ணுடை நிற்பதாலே, மதியானது நீந்துகின்ற கடலைப் போல் ஒரு கற்பனையைத் தருகின்ற வெண்முகிற் கூட்டத்திடையே, புகுந்து நிற்பதால் சந்திரனை முட்டுகின்றனவோ என்ற ஐயத்தைத் தருகின்ற, பொன்னாலும் மணியாலும் ஆன மாளிகைகளும், கல்விச் செழிப்பும் செல்வச் செழிப்பும் அழகிற் சிறந்த மக்களும் நிறைந்து, கவலையே அறியாதவர்களாய் இன்புற்று வாழ்ந்தார்கள் இலங்கையிலே. செங்கோலனான மாவீர இராவணனால் ஆளப்பட்டமையால் நீர்வளமும், நிலவளமும் நிறைந்த இன்பபுரியாய் இருந்தது இலங்கை.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வமும் சேர்வது நாடு----குறள்

## காலத்தாற் தோன்றிய கருத்தரங்கு

நீண்டநாட்களாகக் கனலும் கமலத்தின் தமிழுணர்வை வாசகர்கள் அறிவார்கள். சிங்களத்தின் கருத்துவரலாற்றுச் சிதைப்புகளையும், ஆரியத்தின் ஆபாச இதிகாசப் புராணங்களினால் மூளைக்கு விலங்கிடப்பட்டு, ஆரியமே உயர்ந்தது என்று கருதும், மனநலம் நன்குடையராயினும் அவரிடத்து இனநலம் இன்மை காரணமாக அன்றைய தமிழ்ச் சான்றோர் கண்மூடிக்கிடக்கப், பண்டைத்தமிழ் நூற்செல்வங்களுள் ஆரியம் நுழைந்து, வெட்டி ஒட்டிப் பார்ப்பனீயத்திற்கு எற்ப இலக்கியங்களைத் திரிபு செய்திருப்பதையும், கண்டு கமலம் கனன்று போராடி வருகின்றது.

இந்தக் காலகட்டத்தில் என் கண்ணில் ஒளி உமிழும் படியான ஒரு செய்தி. ஏதோ கருத்தரங்காம். என்ன அது!

# மொழி இலக்கியப் பண்பாட்டியல்–கருத்தரங்கு

விந்தைகள் புரிகின்ற மேற்குலக நாடுகள், மந்தைகளாய், விலங்குகளாய குகைகளிலும் குன்றோரங்களிலும், கூடிக் குவிந்து வாழ்ந்த காலத்திற்கு, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, சங்கம் வைத்து மொழி ஆய்ந்த இனம் தமிழினம். ஓரினத்தின் மிகவுயர்ந்த நாகரீக நிலை மொழி ஆய்வு நிலை. அத்தகைய உன்னத நிலையில் வாழ்ந்த இனம், மதுவிலும் மாதரிலும் மூழ்கிக் கிடந்து, தமக்குள் போரிட்டுச் சிதைந்த மூவேந்தர்களால் தன் நிலை இழந்து, வந்தேறிகளின் வலுவான சூழ்ச்சிகளால் தன் தனித்துவத்தையும் இழந்தது.

இரண்டாயிரங்களுக்கு மேலாகவே திட்டமிடப்பட்ட வகையில் ஆரியப் பார்ப்பனீயம், இந்த இழப்பை ஏற்பதற்கு, இல்லாத கடவுள்களாலும், தலைவிதியாலும் தமிழினத்தைத் தயார்ப்படுத்தி வைத்திருக்கிறது. இன்றும் புதிய காலத்தின் போக்கிற்கேற்ப, அந்தப்பிடியிலிருந்து மீண்டுவிடாமல் இறுக்கிப் பிடித்திருக்கிறது. இந்நிலையில் தான் காலத்தின் தேவையில், இருள் விலகி விடிந்திட உருவாகியது

## மொழி இலக்கியப் பண்பாட்டியல்–கருத்தரங்கு

இரண்டாயிரங்களுக்கு முன்பு கடைசியாக அமைந்திருந்த கடைத்தமிழ்ச் சங்கத்தின் பின், அன்றைய சங்கங்களின், உயிர்த் துடிப்புள்ள, தமிழுக்காகத் தன்னைத் தருகின்ற, எண்ணத்தில் முகிழ்ந்த கருத்தரங்கு இது

இக்கருத்தரங்கு செருமனியில் உள்ள பீலபெல்ட் நகரில், மாசித் திங்கள் 19–21ம் பக்கல்களில் மூன்று நாட்கள் நடைபெற்றது. இக்கருத்தரங்கை தமிழ்த்திரு செங்குட்டுவன் அவர்கள் ஒருங்கிணைப்பாளராகவிருந்து கூட்டினார். இக்கருத்தரங்கின் நோக்கம் உலகளாவிய அளவில் பரந்து வாழும் தமிழர்களுக்கு ஒரு பொதுவான தமிழ்ப் பாடநூலை அமைத்தல், உலகளாவிய அளவில் பொதுத் தேர்வு நடாத்துதல், ஆகியவற்றின் மூலம், தமிழ்கூறும் நல்லுலகெங்கும் ஒரே தன்மைத்தாய தமிழ் உணர்வையும், இனவுணர்வையும், விதைத்து, வளர்த்து, அந்நியக் குப்பைகளைத் தமிழ்மொழி இலக்கியப் பரப்பிலிருந்து களைந்து, தூயநற்றமிழை உலகிற்கு வழங்கி, உலக அரங்கில் தமிழின் தொன்மையையும் மேன்மையையும் நிலைநிறுத்தலாகும்.

இவ்வாறான உயர் எண்ணங்களுடன் கூட்டப்பட்ட கருத்தரங்கில், நாடு தழுவிய வகையில் அழைக்கப்பட்ட 13 நாடுகளைச் சேர்ந்த கற்றறிந்தோர், கல்வித்துறை சார்ந்தோர் கலந்து கொண்டனர்.

மேற்படி கருத்தரங்கில் நாடு தழுவிய அளவிலன்றி எனக்கும் அழைப்புக் கிடைத்தது. என் நீண்டகாலக் குமுறல்களுக்கு வடிகால் சமைக்க முனைகிற கருத்தரங்கில், பங்கு கொள்ள எனக்கு வாய்ப்புக் கிடைத்தது பெரும்பேறே!

எனினும் ஒன்றை இங்கு கூறத்தான் வேண்டும். வள்ளுவனுடைய காலத்திலிருந்து அந்தக் கருத்தரங்கு வரை நான்கண்ட உண்மை ஒன்று, தமிழறிஞர்கள் சிலர் தலைக்கனம் கொண்டவர்களாக இருக்கிறார்களேயன்றி, இனமானமும், தமிழறிவும் உடையவர்களாய் இல்லை. ஆரியத்தால் மூடுண்டு போயுள்ளார்கள். அந்த மூடுகை தவறல்ல என்றும் கருதுகிறார்கள். அதைத் துணிவுடன் சபைகளிலும் கூறுகிறார்கள். இது இனத்தின் சாபக்கேடு. வள்ளுவன் காலத்திலேயே இத்தகைய இனமானம் அற்ற அறிஞர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு அவன் பாடிய குறள் ஒன்று கற்சான்று

மனநலம் நன்குடையரேனும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து.

இந்த இனநலவுணர்வின்மை கருத்தருங்கில் பங்குகொண்ட நல்லறிஞர்கள் சிலரிடம் காணப்பட்டமை விவாதங்களை எழுப்பிற்று. கற்றோர்கள் விவாதங்களில் கருத்துக்களை முன் வைப்பது களிப்பிற்கும் கேள்வியின்பத்திற்கும் உரியதாகும்.

பல்வேறு வாதப்பிரதிவாதங்களால் கருத்தரங்கின் அனைத்து நோக்கங்களும் ஒருமனதாக அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சம்.

செங்குட்டுவன் அவர்களுடைய எண்ணித் துணிந்த துணிவும், எடுத்தாளப்பட்ட விடயங்களை, காலஎல்லைக்குள் வரம்பு மீறாமல் கையாண்ட ஆளுமைத் திறனும், கருத்தரங்கை முழுமையடையச் செய்தது. அம்முழுமையினால் வள்ளுவனின்

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்

என்ற குறளுக்கு அங்கே இலக்கணம் கண்டேன். கூடி இன்புற்றுக் கலங்கிப் பிரிந்தோம். இவ்வேளையில் வியப்பிற்கும் சிரிப்பிற்கும் உரியதாக, இக் கருத்தரங்கு பற்றி செய்திகள் வெளிவந்தவுடன், இதுவரை கண்மூடிக் கிடந்த உருத்திராக்கப் பூனைகள், சில மேடைகளிலும் நாடுகளிலும் புதிய பாடத்திட்டம் அமையவேண்டும், தமிழ்மொழி தூய்மைப்படுத்தப்படல் வேண்டும் என்று முழங்குகிற செய்திகளை நாளேடுகள் தாங்கி வந்தன. எவ்வாறாயினும் இக்கருத்தரங்கால் நலன்கள் விளைவது மகிழ்ச்சிக்குரியதே. இக்கருத்தரங்கு இதுவரை காலமும் தமிழர்களிடையே நிலவி வந்த கருத்துக் குருட்டை நீக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இனியாவது தமிழினம் உண்மையை உணர்ந்து, ஒவ்வொருவரும், தனக்குத் தெரிந்த அளவுக்குள்ளாவது சிந்தித்து உயர்வடையுமாறும், தமிழறிந்த தமிழர்களாகவும் வாழவேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன் தமிழ் வாழத் தமிழன் வாழ்வான். தமிழன் வாழ உலகம் வாழும். அந்தநாள் இந்தநாள்.

வாழ்க தமிழ்!
இருந்தமிழே! உன்னால் இருந்தேன்
அருந்தவத்தால் தமிழனாய்ப் பிறந்தேன்.

அழலாடி

## எழுத்தாளர் மாநாடு

இன்னொரு சிறப்பு மிக்க செயலாக எழுத்தாளர் மாநாடு ஒன்று ஏற்பாடாயிற்று. ஐரோப்பா எங்னும் வாழ்கின்ற எழுத்தாளர்கள், படைப்பாளிகளை ஒன்று கூட்டி, கலை இலக்கியப் படைப்புத்துறை புதுமைப் படுத்தப்படவும், தமிழீழவிடுதலைப் போரினால் இன்று மலர்ந்துள்ள போரியல் இலக்கியத் துறையை வளர்க்கவும், விடுதலை சார்ந்த எழுத்தாளர்களை ஒன்று சேர்த்து, அவர்களுடைய படைப்பாற்றலை, நாட்டு விடுதலைக்காகப் பயன்படுத்தவும், நாட்டுணர்விற்கு வெளியேயுள்ள படைப்பாளிகளை அதற்குட் கொண்டு வரவும், 98ற்குப் பின்னுள்ள புலம் பெயர் நாடுகளில் பிறந்த தமிழ்ப் படைப்புகளை ஆவணப்படுத்தவும், தமிழ்ப் படைப்புகளை வாழிட மொழிகளிலும் வாழிடமொழி இலக்கியங்களை தமிழிலும் மொழிமாற்றுச் செய்து, எமது இலக்கியப்பரப்பை பெருக்குவது என்றும், படைப்பாளிகளை இணைவலை, அறிவினி (கணனி) அறிவாற்றலுக்குள் கொண்டுடவர ஆவன செய்வது என்றும் கருத்துக்கள் வைக்கப்பட்டன.

இம்மாநாடு செருமனியில் ஓபர்கௌசன் நகரில் பங்குனித் திங்கள் 20–21ம் பக்கல்களில் நடைபெற்றது. இம்மாநாட்டை பிரான்சைச் சேர்ந்த எழுத்தாளர் கி.பி.அரவிந்தன் அவர்கள் இணைப்பாளராக இருந்து ஒழுங்காற்றினார்.

வல்லாதிக்க அரசுகளில் இருந்து, அதிகார வாய்ப்புள்ள அமைப்புகளில் உள்ளோர்வரை, பொதுசனத் தொடர்புச் சாதனங்களை, ஒரு குறுகிய வட்டநல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி வருவதை நாம் அறிவோம். இந்த மோசமான நிலை உலகெங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனால் நல்லவைகளும், நல்லவர்களும், வல்லவர்களும் உலகில் மறைக்கப்பட்டு, குற்றங்களும் தவறுகளும் நீதியாக்கப்பட்டு, ஆற்றல்கள் மறைக்கப்படுகின்றன.

இதேபோன்று, ஐரோப்பியத் தமிழேடுகளும், பொதுசனத் தொடர்புச் சாதனங்களும், இவை சார்ந்தவர்களும் தம்மைச் சுற்றி ஒரு முட்கம்பி வேலியை இட்டுக்கொண்டு, படைப்புலகில் யாரும் நுழைந்து தம்மை மிஞ்சிவிடாமல் இருக்க எச்சரிக்கையாக நடந்து கொள்கிறார்கள்.

இணைப்பாளர் அரவிந்தன் அவர்கள், இரு நாளிலும் ஐரோப்பிய அளவிலான எழுத்தாளர் குழு ஒன்றை அமைப்பதற்கு பல தடவைகள் முயன்றபோதிலும், அது செயற்படுத்தப்படாமல் போயிற்று. தொடர்ந்து அம்மாநாடு என்ன செய்யப் போகிறது என்பது பற்றியும் முடிவில்லை.

அம்மாநாட்டில் பேசப்பட்ட விடயங்கள், எடுக்கப்பட்ட முடிவுகள், அனைத்தையும் எதிர்காலத்தில் மாநாட்டு ஒழுங்கமைப்பாளர்கள் நடைமுறைப்படுத்தி, நல்லது விளைய ஆவன செய்வார்களாக!

## கன்னித்தமிழ் காலின் கீழ்

தம் தாய் மொழியைத் தம் உயிரென மதிப்பது தமிழர் பண்பு. தமிழ் எழுதிய ஒரு தாளையோ, தமிழ் நூலையோ காலால் மிதிக்கமாட்டான் தமிழன். நல்லவனோ கெட்டவனோ, தியாகியோ துரோகியோ யாராயிருந்தாலும் தமிழைக் காலால் மிதிக்கமாட்டான். ஆனால் இங்கே இறைன மாநகரில் எம்ச் நதியின் நடைபாலத்தில், எங்கள் தமிழ் காலாதி காலத்திற்கும் காலால் மிதிபடக் கிடக்கிறது. நடந்தது என்ன?

1997ல் என்னுடைய நண்பர் திரு இரா. தனபாலசுந்தரம் அவர்கள் என்னிடம் வந்து, கரிற்றாசு நிறுவனத்தின் வெளிநாட்டவர்களுக்கான அதிகாரி திரு மான்பிறட் கிறைசல் அவர்கள் பல மொழிகளிலும் உள்ள சிறந்த வாக்கியங்களைச் சேர்த்து, உலகு காணப் பொறிக்க விரும்புவதாகவும், அதற்குத் தமிழில் சிறந்த வாக்கியம் ஒன்றைத் தரும்படி கேட்பதாகவும், அப்படியொரு சிறந்த வாக்கியத்தைத் தேடித் தரும்படியும் கேட்டார்.

நான் கி.மு முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த கணியன் பூங்குன்றனார் பாடிய ஒரு பாடலில் இருந்து, "யாதும் ஊரே யாவரும் கேளிர்.." என்ற வாக்கியத்தைப் பொருளுரைத்து வழங்கினேன். 20ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பிறந்த, அனைத்து நாட்டுணர்வை, உலக சகோதரத்துவத்தைத் தமிழனால் 2100 வருடங்களுக்கு முன்பு சொல்லப்பட்ட தென்றால், தமிழினம் அந்நாளில் எவ்வளவு உயர்ந்த நாகரீகமுடையதாக இருந்திருக்கிறது என்று வியந்தார்.

எல்லா நாட்டவர்களும் ஒன்றுதான். உலக மக்கள் எல்லோரும் ஒன்று தான் வேறுபாடில்லை. மனிதசாதி என்பது ஒன்றுதான் ஏற்றத்தாழ்வில்லை சாதிசமயச் சளுக்குகள் பொய். நிறத்தாலோ பணத்தாலோ நாடுகளிடையேயும் மக்களிடையேயும் ஏற்றத் தாழ்வில்லை உலக மாந்தர் அனைவரும் ஒன்றே என்பது அதன் உட்கிடக்கை.

அந்த அதிகாரி இப்படியொரு பொன்மொழி, அந்நாட்களில் எந்தமொழியிலும் இல்லாத பொன்மொழி என்று பாராட்டி, மிகக் கனதியுடைய இரும்பு மாழைத் (மாழை–உலோகம்), தகட்டிலே 20 சென்ரி மீற்றர் நீளஅகலம் இருக்கக்கூடிய பெரிய எழுத்துக்களாக, உருக்கிப் பொறித்து, எல்லோரும் பார்க்கும் வண்ணம், அந்த நதியின் நடைபாலத்தில் தரையில் பதிப்பித்துள்ளார்.

அந்தப் பாலத்தின் மீது நான் நடந்து சென்றபோது, கண்ணில் தமிழ்படவே சென்று பார்த்தேன். நான் கொடுத்த அந்த வாக்கியம், நல்லெண்ணத்தால், உயர்மதிப்பால் காலில் மிதிபடுகிறது.

அதுகண்டு ஏற்பட்டவேதனை உடனும் நீங்கிற்று. இருக்கும் இடமல்ல முக்கியம். தருகின்ற பயனும் பெறுகின்ற மதிப்புமே முக்கியம். என் உயிர்த்தமிழே! எம்ச் நதி தீரத்திலே நீ மிதிபட்டாலும் பரவாயில்லை. எம்ச் நதியுள்ள வரை நீயும் இருப்பாய் செருமனியில்-- தமிழே நீ வாழ்க!

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழீழம் எங்கள் வாழ்விற்கு வேர்.

பழந்தமிழ் வாழ்வை எமக்குத் தந்து வழிகாட்டும் பேரிலக்கண நூலான தொல்காப்பியம் தந்த தொல்காப்பியர் இருக்க, தமிழர் வாழ்க்கைச் சட்ட நூலான உலகப்பொதுமறை, திருக்குறள் தந்த வள்ளுவர் இருக்க, பழந்தமிழ் மக்களின் அகப்புற வாழ்வை அருந்தமிழ்ப் பாக்களால் தந்த சங்கப் பெரும் புலவர்கள் இருக்க, கற்றார் கல்லாதார் என்று வேறுபாடின்றி யாவரும் அறிந்த ஔவையார் இருக்க, இமய முதல் குமரிவரை ஒருமொழி வைத்தாண்ட தமிழ்ப்பெருமைக்கோர் சான்றாக சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் இருக்க, இன்னும் எத்தனையோ தமிழ்ப்பெரும் புலவர்கள் இருக்க, அவர்களுக்கெல்லாம் கொண்டாட்டம் இல்லை. விழாக்கள் இல்லை. மக்களிடையே அவர்களைப் பற்றிப் பேசுவதும் இல்லை. இவர்கள் தமிழுக்காகத் தமிழினப் பெருமைக்காகத் தங்கள் புலமையைப் பயன் படுத்தியவர்கள். ஆனால் தமிழர் வீழ்விற்காகத், தமிழினப் பகைவரான ஆரியர் வாழ்விற்காகத், தமிழினத்தை ஆரியத்திடம் அடிமைப் படுத்துவதற்காகத், தன்னினப் பெருந்தலைவன் இராவணனைப் பழித்தும் இழித்தும் இனத்துரோகம் புரிந்த கம்பனுக்கு ஆண்டுதோறும் விழா எடுக்கிறார்கள் தமிழர்கள் என்றால், ஆரியத்தின் சூழ்ச்சித் திறம் தான் என்னே?

பெயரைக் கேட்டாலே ஆரியர் அஞ்சி நடுங்கிய ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனுக்கு, இமயத்தில் புலி பொறித்த கரிகாற் பெருவளத்தானுக்கு, தமிழைப் பழித்த வடவர் தலையில் இமயக் கல்லேற்றி வந்த சேரன் செங்குட்டுவனுக்கு, வாதாபியைத் தீக்களித்த மாமல்லபல்லவனுக்கு பிறந்த நாள் கொண்டாடுவதில்லை.. கம்பனின் இராமாயணத்தால் ஏற்பட்ட ஆரிய மோகத்தால், இராமனுக்கு ராமநவமி பிறந்த நாள் கொண்டாடி, அன்று இராவணனின் உருவத்தை எரித்துக் கொண்டாடி மகிழ்கிற கொடுஞ்செயலைச் செய்து மகிழ்கிறார்கள். தமிழர்கள்.

--- இராவணகாவியம் பாடிய புலவர் குழந்தை---

குறிப்பு:- ஆரியத்தால் மூடுண்டு, இரண்டறக் கலந்து போயுள்ள தமிழகத்தில் தானா இது? இல்லை. தமிழீழத்திலும் தான்.

# அன்புத் தமிழீழ மக்களே! உலகத் தமிழினமே!

- தாம்வாழத் தமிழழிக்கும் தமிழ் விரோதிகளை
- ஆரியத்தின் அடிதடவும் அடிமைத் தமிழர்களை
- தீந்தமிழிருக்க பிறமொழிக்குப் புகழ் பாடும் தறுதலைத் தமிழர்களை
- தமிழர் பண்பாட்டைத் தாழ்த்தி நிற்கும் ஆரிய ஆபாசக் காவியங்களைப் போற்றிப்பாடும் தமிழ்ப் பேதைகளை
- எழுந்தமானத்தில் எழுதுகின்ற நானும் எழுத்தாளன் என்கின்ற தமிழ்ப் போலிகளை

தமிழால் அடித்துத் திருத்தித் தமிழுக்குட் கொண்டுவர
கனலில் மலர்கிறது கமலம்

கமலம் ஒரு பொழுதுபோக்கு இதழல்ல—
தமிழாய்வு செய்யும் முத்திங்கள் ஏடு.
கமலத்தின் எண்ணத்தடிப்படையில் சீர்திருத்தக்
கருத்துடையோரின் எழுத்துக்கள் வரவேற்கப்படும்.

<u>தொடர்புகளுக்கு</u>

KAMALAM
Sachsen Str. 9
48429 Rheine
GERMANY

கொண்டாரைக் காதல் காதலித்தக் காதலினால் கொண்டாடி
மகிழ்ந்து குவலயத்துள் – கொண்ட
புகழ்க்குன்றின் உச்சியிலே ஏற்றிவைத் தின்பத்துள்
திகழ்வாள் அவளே தமிழ். .......... தமிழ்மணி நா.சி. கமலநாதன்

# காலம்

